1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை — பிரிசதம் 10 | 41-ம் இலக்கம் |
|---|---|---|

# 21-10-56 விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

## நாம்பெற்ற ஞானஒளியை இவ்வையகமும் பெறுக!

உலகமக்களில் பலர் கிறீஸ்து சமயத்தைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள். பலர் கேள்விப்பட்டும் அதன் முக்கியத்துவத்தை உணராமலும், உணர்ந்தும் மெய்ப்பொருள்காணும்வரை ஊன்றிச் சிந்தியாமலும் இருப்பவர்கள். சிலர் ஊன்றிச்சிந்தித்தும் உண்மைகாண முயலாதவர்கள். முயன்றும் மெய்ப்பொருள் காணுதவர்களின்மனநிலைதான்விபரீதமானது. இந்த விபரீத மனப்பான்மைக்கு இருமுக்கிய காரணங்கள் உண்டு. அவற்றிலே நல்லொழுக்கத்தைப்பற்றி இவர்களுக்குள்ள பிழையானவிளக்கம் ஒன்று. மற்றது, கற்றுணர்ந்து அடங்காததால் ஏற்படுங்கர்வம்.

மனவிருப்பம் விசுவாசத்திற்கு இன்றியமையாதது. விரும்பாததை ஒருபோதும் விசுவசிக்கமுடியாது. தங்கள் புத்திக்கு எட்டாதவைகளைநம்பாதவர்களும், காரணமில்லாத விருப்பு வெறுப்பு உள்ளவர்களும், வேதாகமங்கள் கூறும்கண்டிப்பானநல்லொழுக்க வழிகளைப் பின்பற்ற மனமில்லாதவர்களும், உண்மையைஅறிந்தும் ஏற்றுக்கொள்ளமனங்கொள்ளாதவர்களும் வேதவிசுவாசிகளாவது எங்ஙனம்? இத்தகைய குரோதமனநிலையிலே வேதபுத்தகத்தைப் புரட்டிப்புரட்டி வாசிக்கும்ஒருவன் உண்மையைக்காணுமல் மலைப்பது வியப்பன்று. மனதில் விபரீதஎண்ணங்கள் மலிந்திருக்கும்போது வேதாகமங்கள் கூறும்உண்மைகள் அவன்மனப்போக்குக்கு ஒத்துப்போகா. ஆகவே, அவன் விசுவசிக்கமாட்டான். நிறக்கண்ணுடியினூடாக உலகத்தை உற்றுநோக்கும் ஒருவன் உலகமுழுவதும் கண்ணுடியின் நிறந்தானென்று சாதிப்பானுகில் அவனைஉலகம் முட்டாளெனக் கூறுமன்றோ! ஒருவர்செய்யும் எந்தக்கருமமும் நாம் விரும்பாதபோது நமக்குக் கசப்பாகத்தான்தோன்றும். தனது பகைவன்செய்யுங் கருமங்களிலும் நற்செயல்கள் இருக்குமெனநம்பி



வேதபோதக நாடுகளின் அரசியான தேவதாயார்

அவற்றைக் கண்டுபிடிக்கமுயலும் சாதுரியமும், தாராளமனப்பான்மையுமுள்ளமக்கள் உலகில் மிகச் சிலரே. சுயநலப்பிரியன் ஒருவன் தனக்கெனவாழாது பிறர்க்கென வாழும் தருமசீலனை நம்பான். கபடன் தூயமனமுடையவனை நம்பான். காமாதுரன் கற்பின்களஞ்சியமாகிய மனிதனை நம்பான்.

தேவன் நமக்குஅருளிய கொடைகளுளெல்லாம் உந்நதமும், மகத்துவமும் பொருந்தியது வேதவிசுவாசம். இப்பெரும் நன்கொடைக்கு ஈடுசெய்வது இயலாக்கருமம். இந்தக்கொடையின் பெருமையை அநேகர் உணர்வதில்லை. ஓர்உபகாரத்தைப் பெற்றுக்கொண்டவன் உபகாரிக்குக் கடமைப்பட்டிருக்கிறுன். அதேபிரகாரம் இப்பெரும் நன்கொடையைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகளான கத்தோலிக்கமக்களாகிய நாமும் தேவனுக்கு மிகவும்கடமைப்பட்டிருக்கிறோம். விலைமதித்தற்கரிய பெருந்திரவியமாகிய விசுவாசத்தை நாம் பக்குவமாக வளர்த்துப் பாதுகாத்துப் பயனளிக்கும்படி செய்தல் வேண்டும். அதன் பலனை நாம்மட்டும் அனுபவித்தாற் போதாது. நாம் பெற்றஞானஒளி இவ்வையகமும் பெறுகஎன்னும் உயரிய நோக்குடன் பிறருக்கும் அதை எடுத்துரைக்கவேண்டும். பயன்படுத்தப்படாத — பரப்பப்படாத விசுவாசம் இறந்துபட்டுப் பலனற்றதாகிவிடும். எவ்வளவு அதிகமாகத் தேவனிடமிருந்து நாம் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறேமோ அவ்வளவு அதிகமாக நமது கடமைகளும் அதிகரிக்கும். அதிகம் கொடுத்தவனிடம் அதிகம் கணக்குக்கேட்பார் என்பது வேதவாக்கியம். விசுவாசம் உத்தமசீவியத்தின் உயிர்நாடியாகும். நல்ல ஒழுக்கமானவாழ்வுக்கு விசுவாசமவசியம். விசுவாசிஒருவன் நல்லொழுக்க மில்லாதவனுயிருந்தால் அவனுடையவிசுவாசம் உயிரற்றது—பயனற்றது. நற்கிரிகைகள் விசுவாசத்தின் ஊற்று. விசுவாசமும், நற்கிரிகைகளும் சத்தியமறை அநுசரணைகளுக்கு மிகமிக அவசியம். மக்களின் ஞானச்சீவியம் விசுவாசத்திலும், நற்கிரிகைகளிலும் அடங்கியிருக்கிறது. இவைகள்இரண்டும் கிறீஸ்துவர்களாகிய எம்மிடம் நிரம்பவிருந்தாற்றுன் இவ்வுலகில் ஆறுதலையும், சமாதானத்தையும் அடைந்து, மறுஉலகிலும் நித்தியமாகத் தேவனேடு பரலோகஇராச்சியத்தில் இளைப்பாறலாம்.

நான்பெற்ற ஞானஒளியை இவ்வையகமும் பெறுக!

---

நியூயோர்க்நகரில் நடந்தேறவிருக்கும் ஐக்கிய நாடுகளின் அணுச்சக்தி மகாநாட்டுக்குச் செல்லவிருக்கும் வத்திக்கான் இராச்சிய தூதுக்கோஷ்டியின் தலைவராக ஐக்கியஅமெரிக்கதேச இந்தியானுநகர் நோட்றேடாம் சர்வகலாசாலையின் அதிபரான வண. தியடோர் ஹெஸ்பேர்க் சுவாமிகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றுர். இவர் வாஷிங்ரன் நகரில் இருந்துவருகின்ற அமெரிக்க தேசிய விஞ்ஞானகழகத்தில் ஓர்அங்கத்தவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த செமாலைப் படையணி

(ஓர் குருப்பிரசாதியின் அபிப்பிராயம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)


இச்சேனையைப்பற்றி இதுவரையும் பல்வேறு துண்டுப்புத்தகங்களும், பிரசுரங்களும் வெளிவந்துள்ளன. இவற்றில் இப்பத்திச்சபையின் சிறப்பைப்பற்றி இலங்கையிலும், இந்தியாவின் சிலபகுதிகளிலுமுள்ள மேற்றிராணிமார் விதந்து கூறியதுடன், திருச்செபமாலையின் மகத்துவத்தையும், அகத்தியத்தையும் எடுத்துக்காட்டியுமிருக்கின்றனர். அன்று பலஸ்தீனுவில் யேசுநாதசுவாமியின் சீவியமும், மரியாயின்வாழ்க்கையும் எவ்விதம்மலர்ந்தனவோ அச்சுகிர்தமுறைகளைச் செபமாலையின் ஒவ்வொருகாரணிக்கமும் நமக்குப் பிரகடனஞ்செய்கின்றது. இக்காரணிக்கங்கள் குறிக்கும் பரமஇரகசியங்கள் நித்தியத்துடன் தொடர்புடையன. ஏனெனில், மனிதனுய் அவதரித்த தேவசுதன் ஒவ்வொரு பரம இரகசியத்தினதும் மையஸ்தானமாய் விளங்குகிருர்.

இச்செபச்சேனை தன்னிலே ஒரு பத்திச்சபையாய் இருப்பதுமன்றி ஆத்துமங்களைக் கத்தோலிக்கஊழியத்துக் குகந்த சேவையாளராகத் தயார்பண்ணுவதற்கேற்ற நிலக்களனுயும் இருக்கிறது. தனதுஅங்கத்தவர்களையே மேற்படிஊழியத்துக்கு உற்சாகமூட்டியழைக்கின்றது. எனவே, கத்தோலிக்கஊழிய சேவையில் ஈடுபட்டுள்ள பத்திச்சபைகள் செபமாலைப்படையணியில் கிறீஸ்துவர்களைச் சேரத்தூண்டுதல் வெகு பலனுள்ள சேவையாகும். ஏனெனில், செபமாலைப்படையணி கிறீஸ்துவசீவியத்தின் மூலாதார அநுசரணைகளைக் கடைப்பிடிக்கின்றது. ஆத்துமங்களை முதன்முதல் கிறீஸ்துவசீவியத்துக்கு வழிநடத்தித்தான் அப்போஸ்தல சீவியத்துக்கு அழைக்கவேண்டும். மரியாயின்சேனை அங்கத்தவர், இளம்கத்தோலிக்க ஊழிய சங்கத்தவர் முதலாம் மற்றும் பத்திக்கூட்டத்தினர் இதிற்சேருவதினுல் அவர்களின்அலுவல்களுக்குத் தடையேற்படாது. அதற்குப்பதிலாக அவர்கள் பத்திவேகமிக்க கத்தோலிக்க சேவையாளராவர்.

செபமாலை தன்னிலே ஒருகதியானதன்று. அதிற்தான் எல்லாம்என்றும் மிதங்கடந்து ஏற்றுதல் கிறீஸ்துவ திட்டத்தைப் புரட்டியடிப்பதாகும். பூசைப்பலிக்குரியவல்லபம் அதற்கில்லை. செபமாலைப்பத்தியில் மனிதரைத்தூண்டுகிறேம். தேவதாயின்பத்திக்கு அவர்களை அழைக்கிறேம். ஏன்? மரியாய் தனதுபக்தர்களைத் தனக்காக வைத்துக்கொள்பவளல்ல. தனது திருமகனிடம் இட்டுச்செல்கிருள். சகலமும் அவரை நோக்கித் திருப்பப்படும். அவர்சாயலாய் உருவாக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படும். தகுந்தமுறைப்படி தியானித்துச் செபக்கருத்துடன் செபமாலையோதும்ஒருவன் கிறீஸ்துவசீவியத்தின் மையஸ்தானம் பரிசுத்த பூசைப்பலி என்பதைக் கண்டுபிடிப்பான். அதன்மகத்துவத்தை உணராமலிரான். அவன்தினமும் காரணிக்கங்களைத் தியானிக்கும்போது அவைகள்குறிக்கும் பரம இரகசியங்களை ஆராயாமல்விடான். ஆராயுங்கால் அவற்றின்நிறைவேற்றம் பரிசுத்தபூசைப்பலி என்பதை உணரவேஉணருவான். எனவே,செபமாலை ஆராய்வானதும், நியாயதோரணையுமானவிசுவாசத்தை நம்மிடத்தில்தூண்டும் ஏதனம். ஒருவனிடம் செபமாலை இத்தகைய பலனைத் தராவிடில், அதுஅவனிடம் ஏற்ற பலனைத் தரத்தவறியதெனலாம். சரியாய்ச்சொல்லில் செபமாலை பூசைப்பலிக்கு மனிதரைவழிநடத்த வேண்டும். இதனுற்தான் செபமாலைப்படையணியின் மூன்றுநிபந்தனைகளும் பூசைப்பலியுடன் இணைந்துள்ளன. பூசை சரியான செபத்தியானம். அதன்நோக்கம் பாவத்தைப் பரிகரித்தல், நிர்மூலமாக்கல். மனஸ்தாபமும், சுத்தமும்இல்லாத இதயத்துடன் அதிற்சரியாய்ப் பங்கடையமுடியாது. இத்தகையநிலையிற் திவ்வியநன்மை அருந்தப்படாது. கடைசியாய்த் தேவதிரவியாநுமானங்கள் யாவும்—அதிவிசேஷமாய்த் திவ்விய நற்கருணை பிரிக்கக்கூடாதமுறையில் திவ்வியபூசைப்பலியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அர்ச். கன்னிமரியாயே! ஆத்துமாக்களை உமதுதிருமகனிடம் கூட்டிச்சேரும். அர்ச். சாமிநாதரே! பரிசுத்தசெபமாலைப் படையணியைப்பற்றிய இச்சிறு கட்டுரையை ஆசீர்வதியும். செபமாலைப்படையணியின் பாதுகாவலரான அர்ச். பெர்நார்துவே உமது தாசர்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

"பரிசுத்தபூசைப்பலி, திருச்சபையின் கடமைச்செபம் இவற்றிற்கு அடுத்தபடியாகப் பயபக்தியாகச் செபமாலைஓதுவதைப்போல் கிறீஸ்துநாதருக்கும் அவருடையதேவஅன்னைக்கும் அத்துணைஉவந்த வேறு வேண்டுதல் எதுவுமில்லை."

— அர்ச். சாமிநாதர்



கிளிநொச்சிப் புதிய மீசாம். வட்டக்கச்சியிலுள்ள அர்ச். சூசையப்பர் கோவில்.

# யாழ்ப்பாணம் பரிசுத்த அடைக்கலநாயகி கோவில்

## சதாசகாயமாதாவின் 200-ம் நோவனைப் பக்திமுயற்சி

எமது பங்குக்கிறீஸ்துவர்களின்விருப்புக்கிசைந்து வண. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்கள் தமது காலத்தில் 1952-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந்திகதி அடியிட்ட சதாசகாய மாதா நோவனைப் பக்திமுயற்சியானது அவரின் அயராமுயற்சியாலும், கிறீஸ்துவர்களின் ஒத்துழைப்பாலும் வளர்பிறையொப்ப வளர்ந்து பெருமரமாகித் தற்போது மோட்டர்தங்கள், புகையிரதங்கள் வழியாயும், கால்நடையாயும் தூரஇடங்களிலிருந்துதானும் பக்தர்களைக்கவர்ந்து, அனைவர் இதயங்களிலும் சதாசகாயமாதாவின் பக்தியை வளர்த்து வந்திருக்கிறதென்பதைப் பெருமையுடன் குறிப்பிடலாம். அவரைத் தொடர்ந்து எமதுபங்குக் குருவாய் வந்த வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைச் சுவாமியவர்களும் இந்த நோவனைப் பக்திமுயற்சியை முன்னிலும் அதிகம் பக்தியூட்டிக்குரிய விதமாய் நடக்க வேண்டுமென்னும் வாஞ்சையோடு உழைத்துவருகிறபடியால் சதாசகாய மாதாபக்தி முன்னிலும்மேலாய் வளர்ந்துகொண்டு வருவதையிட்டு இதயபூர்வமாக நன்றிகூறவேண்டியவர்களாயிருக்கிறேம்.

சதாசகாயமாதா நோவனைப் பக்திமுயற்சி ஆரம்பமான இருநூறுவது வாரம் இம்மாசம் 3-ந் திகதி காலை பாடற்பூசையுடனும், மாலை கோயிலின் உள்ளும் புறமும் பெருந்திரளான பக்தர்கள் தேங்கிநிற்க நடைபெற்ற ஆடம்பர சுற்றுப்பிரகாரத்துடனும் கொண்டாடப்பட்டது. முந்திய மூந்தினங்களிலும் திரிதினஆராதனைகள் நடைபெற்றன. திரிதினஆராதனை நாட்களிலே வண. எஸ். பீற்றர் சுவாமியவர்களின் கனிந்தபிரசங்கங்கள் தேன்மாரி பொழிந்தவாறுய் மக்களின் இதயங்களைப் பிளந்து வரப்பிரசாத ஊற்றுகள் மடைதிறந்துபாயச்செய்தன.

அன்றுமாலை 5-30 மணிக்குச் செபமாலை, மாலைஆராதனையைத் தொடர்ந்து நடைபெற்ற மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம் பாண்டுவாத்தியம்இசைத்து வழிகாட்டிச்செல்ல, பெருந்திரளானமக்கள் தத்தம்கொடிகள் காத்தேந்திச் செபங்களோதி முன்செல்ல, பாடகர்குழாம் கீதம்பாட, சதாசகாய நாயகி கேடயத்தெழுந்தருளி நடுவிடமாக அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியூடேசென்று ஆலயத்துள் பிரவேசித்ததும் வண. பீற்றர் சுவாமியவர்கள் தேவதாயாரின் வல்லபத்தை வர்ணித்து, "வாக்குத்தத்தப்பேழையே, எங்களுக்காகவேண்டிக்கொள்ளும்" எனும் மன்றாட்டைப் பெருங்குரலெடுத்துப் பக்தர்கள் எல்லாருடனும் சொல்ல, இருநூறுவது நோவனைப் பக்திமுயற்சி நடைபெற்று இனிதே முடிவுற்றது.

ஏ. எஸ். மரியாயின் பக்தன்

# அங்கும் இவ்வாறு நடக்குமா?

சமீபத்திலே ஆமதாபாதில்நிகழ்ந்த ஓர்கூட்டத்தில் பண்டிதநேரு அவர்களைப் பேசவிடாமல் தடுக்க — பேசினுலும் அவர்பேசுவதைக் கூட்டத்தில் இருக்கிறவர்கள் கேட்காமல் தடுக்கப் பலநூற்றுக்கணக்கான மாணவர்களும், மற்றவர்களும் கத்திக்கொண்டும், குழப்பம் விளைத்துக்கொண்டும் இருந்தபோது பண்டிதநேருஅவர்கள் கூறியதாவது: "ருஷியாவில் இவ்வித குழப்பம் நடைபெறமுடியாது. சீனுவில் நீங்கள் இவ்வாறு செய்தால் என்ன நடைபெறும் தெரியுமா? சமீபத்திலே போலாந்தில் என்ன நடைபெற்றது தெரியுமா? சீனுவில் நடைபெறுவதையும், போலாந்தில் நடந்ததையும்பற்றிப் பண்டிதநேரு சிலநிமிஷம் பேசியிருக்கலாம். ஆனுல், "உங்களுக்குப் பொதுவுடைமை நாடுகள்பற்றியும், பொதுவுடைமையல்லாத நாடுகள்பற்றியும் தெரியும்" என்று சொல்லிவிட்டு, வேறுவிஷயங்களைப் பற்றிப் பேசத்தொடங்கினுர். ஆனுல், ஆமதாபாதிலேயே வேருெர்கூட்டத்தில் அவர் பேசுகையில், போலாந்தில் நடந்த பயங்கர சம்பவங்களைப்பற்றிச் சிறிதளவு பேசினுர்: "ஆமதாபாத் கலகத்தின்போது பொலிசர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கம்யூனிஸ்தர்கள்கண்டிப்பது எனக்குப் புரியவில்லை. பொலிசர் மக்களின் பகைவர்கள் அல்ல. தங்கள் கடமையைச் செய்யும்போது சிலசமயம் அவர்கள் சுடவேண்டி[illegible] நான் துப்பாக்கிப்பிரயோகங்களை எதிர்ப்பவன், ஆனுல், கம்யூனிஸ்தர்கள் அதைப்பற்றிப் பேசுவதுதான் எனக்கு விளங்கவில்லை, சமீபத்திலே போலாந்தில் கலவரங்கள் நடந்ததையும், அப்போது தெருக்களில் தாங்கிகள் கொண்டுவரப்பட்டதையும் நான்உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கலகத்தை அடக்குவதற்குச் சாதாரணமாக யுத்தத்தில் உபயோகிக்கும் ஆயுதங்களைப் போலிஷ் அரசாங்கம் உபயோகித்ததைப்பற்றி இந்தியகம்யூனிஸ்தர்கள் வாயே திறக்கவில்லை என்பதைமட்டும் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதிலிருந்தே கம்யூனிஸ்தர்களின் தன்மையைக் கண்டுகொள்ளலாம்."

● ஸ்கொத்லாந்தின் இரண்டாவது ருெபேட் அரசரின் நேர்சந்ததியில் உதித்தவரும், ஓர் கத்தோலிக்கருமான பியூட்டின் மாக்குவெஸ் பிரபுவான ஜோண் கிறிச்ரன் ஸ்ருவாட் அவர்கள் தமது 49-ம் வயதிலே சென்றமாதம் காலஞ்செல்லலாயினுர். பிரித்தானியின் முதன்மைவாய்ந்த பட்சிசாஸ்திரிகளில் ஒருவரானஇவர் சென் கில்டா என்ற தனிப்பட்ட தீவைவாங்கி அதனைப் பட்சிகளின் புகலிடமாக ஆக்கிவைத்தார். இவர் புராதனப் பொருளாராய்ச்சியிலும் சிறந்துவிளங்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். தோமையாரின் மகாலயம்

மைலாப்பூரிலுள்ள அர்ச். தோமையாரின் ஆசனக்கோவில் இந்தியாவில் ஓர்மகாலயமாக இன்று விளங்குகின்றது. இந்தஆலயம் இருந்துவரும்இடத்திலே ஆதியில் அப்போஸ்தலரான அர்ச். தோமையாரால் கட்டப்பெற்ற ஓர்சின்னக்கோவில்தான் இருந்தது. அவர்இந்தச்சிறியகோவிலில்தான் அடக்கஞ்செய்யப்பெற்ருர். 1606-ம்ஆண்டு தைமாதம் 9-ந்திகதியன்று மைலாப்பூர் ஓர்மேற்றிராசனமாக்கப் பட்டபோது, அங்கே 1524-ம் ஆண்டுகட்டியெழுப்பிய பழையகோவில் ஆசனக்கோவிலாக்கப்பட்டது.

அதன்மேல் அப்போஸ்தலரின் கல்லறையை மத்தியாகக் கொண்டு ஓர்புதியஆசனக்கோவிலைக் கட்டியெழுப்புவதற்காக இந்தஆசனக்கோவில் 1893-ம் ஆண்டு இடிக்கப்பட்டு, அதேவருடத்தில்தானே அத்திவாரமிடப்பெற்ற புதியஆசனக்கோவில் 1896-ம்ஆண்டுகட்டிமுடிந்து அபிஷேகஞ்செய்யப்பட்டது. இது 7 பலிபீடங்களைக்கொண்டது. ஏழும் அபிஷேகஞ்செய்யப்பட்டனவாகும். சமீபத்திலே இந்த ஆசனக்கோவில் பஸிலிக்கா எனப்படும் மகாலயஅந்தஸ்துக்குயர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்துள்ளபழையஆசனக்கோவிலின் குருமனையில்தான் அர்ச். பிரான்சிஸ்சவேரியார் தூரகீழ் நாடுகளுக்கு வேதம்போதிக்கச் செல்லுமுன் 1545-ம்ஆண்டிலே நான்குமாதக்காலத்தை அப்போஸ்தலரின் கல்லறையிலும், தேவதாயாரது திருச்சாயல் முன்பாகவுஞ் செபஞ்செய்வதிலே செலவிட்டார்.

இந்தமகாலயம் அர்ச். தோமையாரைக் குத்திக்கொன்ற ஈட்டியையும், புராதன ஸ்தூபம் ஒன்றிலே அவரது திருஎன்புகளின் ஓர்துண்டையும் கொண்டிருக்கிறது. 1954-ம் ஆண்டு தைமாதம்13-ந்திகதி கருதினல் திசருன்ஆண்டவர் திவ்வியகர்த்தரின் திருவிலாவைத்தொட்ட அப்போஸ்தலரது கரத்தின் திருஎலும்புத் துண்டு ஒன்றை அடக்கிய அழகுவாய்ந்த ஸ்தூபம்ஒன்றை ஒட்ரோனுவிலிருந்து கொண்டுவந்து இம்மகாலயத்துக்கு அன்பளிப்புச்செய்தார்.

1952-ம்ஆண்டு கார்த்திகை மாதம்14-ந்திகதியன்று சென்னை அதிமேற்றிராசனமும், மைலாப்பூர் மேற்றிராசனமும் ஓர்தனி அதிமேற்றிராசனமாக ஒன்று சேர்க்கப்பட்டுத் தற்போது சென்னை—மைலாப்பூர் அதிமேற்றிராசனமென அழைக்கப்பெற்று வருகிறது. இதன் முதலாவது அதிமேற்றிராணியார் மகாமேன்மைதங்கிய லூயிஸ் மத்தியாஸ் ஆண்டகைஅவர்களே.

## நோயாளரின் ஆகாயத்திருயாத்திரை


ஐக்கிய அமெரிக்கதேசத்திலே இரட்சணியமாதா சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 12-ந் திகதி வெள்ளிக்கிழமை நோயாளரின் ஆகாயத் திருயாத்திரைஒன்று நியூயோக்நகரிலிருந்து பிரான்ஸ்தேச லூர்துதிருப்பதிக்கு ஆரம்பமாயிற்று. யாத்திரிகர்கள் அன்று காலை நியூயோக்நகர் ஆசனக்கோவிலில் திவ்வியபூசைகண்டு ஆகாயவிமானத்திலே தங்கள் யாத்திரையை ஆரம்பித்தார்கள். மூன்ரும்நாளாகிய 15-ந் திகதியன்று யாத்திரைவிமானம் லூர்துபதியிலிருந்து 15 நிமிஷ மோட்டார்ரதப் பிரயாண தூரத்திலுள்ள ஒஸ்ஸன் விமானநிலையத்தில் போய்ச் சேரவிருந்தது. அங்கிருந்து இந்த நோயாளர் தத்தம் நிலைமைக்கேற்றபடி லூர்துதிருப்பதி ஆஸ்பத்திரிகளுக்கு அல்லது ஹொட்டல்களுக்குக் கொண்டு செல்லப்படுவார்கள். ஆறுநாட்கள் அங்கு தங்கியிருந்தபின் 18-ந்திகதி அவர்கள் மறுபடி புறப்பட்டு மறுநாள் நியூயோக்நகர் போய்ச் சேர்வார்கள். சேர்ந்ததும் அங்கு ஐடிள்வில்ட் எனுமிடத்திலுள்ள சர்வதேச ஆகாயவிமான நிலையத்தில் ஓர்தேவதோத்திரபூசை நிறைவேறும். 1957-ம் ஆண்டுமுதல் மாதந்தோறும் நோயாளரின் ஆகாய யாத்திரைகளை லூர்துதிருப்பதிக்கு அனுப்பிவைக்க முன்சொன்ன சங்கம் திட்டமிடுகின்றது.

## கடலின்கீழ் திருச்சுரூபம்

ஸ்பானியதேச சின்ற்ஜெஸ் நகரின் கரைக்கப்பால் மத்தியதரைக்கடலிலே தண்ணீரின்கீழ் அமைந்துள்ள ஓர்குகையிலே நீச்சல்காரர்சேர்ந்து தேவதாயாரின் திருச்சுரூபம்ஒன்றை ஸ்தாபித்திருக்கிருர்கள். இந்தச் சுரூபம் ஈயத்தால்செய்து குளிர்ந்தபிரகாச வர்ணம்பூசப்பட்டுள்ளது. அதனுல் இது தண்ணீரின்கீழும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இது கற்றலோனியாவின் பாதுகாவலாளியான மொன்செருத் மாதா சுரூபத்தின் பிரதிரூபமாகும்.

## குடும்பங்களும் குடும்பசெபமாலையும்

கனடாதேச லண்டன்நகர்மேற்றிராசன நூற்ருண்டு விழாவிற்கும், அங்குதானே 1948-ம்ஆண்டு தாம்அடியிட்ட செபமாலைப் பணியின் எட்டாவது ஆண்டு நிறைவுவிழாவிற்குமாகச் சமீபத்திலே வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் சமூகமளித்திருந்தார். தமது செபமாலைப் படையணியிலே ஈடுபட்டுக் கடந்தஎட்டுவருடங்களிலும் சுவாமியார் 5லட்சம் மைல் பிரயாணஞ்செய்து, ஐந்து கண்டங்களிலுமுள்ள 235 அதிமேற்றிராசனங்கள், மேற்றிராசனங்களிலே குடும்ப செபமாலையைத் தொடக்கிவிட்டிருக்கின்ருர். அதன்விளைவாக ஒருகோடிக்குமேற்பட்ட குடும்பங்கள் இன்றுசெபமாலை சொல்லிவருவதாகஅவர் தெரிவித்திருக்கின்ருர்.



மலைகளிலே 30 மைல் தூரத்திற் கப்பாலுள்ள தமது ஞானமந்தையைத் தரிசிக்கின்ருர் சுவாமியார்.

## முத்திப்பேறுபெற்ற பட்டஞ்சூடினர்

1676-ம் ஆண்டுமுதல் 1689-ம் ஆண்டுவரை திருச்சபையை ஆட்சிசெய்த 11-ம்இன்னெசெந் பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளும் திருவைபவத்தை முன்னிட்டுப் பரிசுத்த பாப்பரசர் இம்மாதம் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை தமது கோடைகால மாளிகையிலிருந்து வத்திக்கானுக்குத் திரும்பலாயினர். இத்திருப்பட்டம் அருளும்விஷயமாய் இன்னெசெந்பாப்பானவரின் கல்லறையிலிருந்து அவரின் திருவுடல் சிலகாலத்தின்முன்னரே வெளியிலெடுக்கப்பட்டு, அவருடையதுதான் அதுவென்று சமயசம்பிரதாயப்படி நிரூபிக்கப்படலாயிற்று. பின்னர்அது பளிங்குபோன்ற கண்ணுடிப் பேழை ஒன்றில் வைத்து அர்ச். பேதுருவானவர் சிம்மாசனப் பலிபீடத்தின்முன்பாக ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அர்ச். 10-ம் பத்திநாத பாப்பானவரின திருவுடலைப் போன்று அதுவும் பாப்பானவருக்குரிய ஆசாரிய வஸ்திரங்கள் தரிக்கப்பெற்று, சிரசு வெள்ளியாற்செய்த மூடிஒன்ருல் மூடப்பட்டிருந்தது. அவ்வாறே கரங்களும் மூடப்பட்டிருந்தன. அன்று காலை நடைபெற்ற திருவைபவத்திலே அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதாகப் பிரகடனஞ்செய்யும் திருச்சடங்காசார திருச்சங்கத்தின் அதிகாரப்பத்திரம் வாசிக்கப்பட்டதும் திருவுடல் வைத்திருந்தபேழை விசுவாசிகளின் வணக்கத்துக்காகத் திறந்துவைக்கப் பட்டது. இத்திருவைபவத்தின்போது பாப்பரசர் வழமைபோலச் சமுகமளிக்கவில்லை. ஆனுல், மற்றோர் திருவைபவத்தின்போது அவரின்திருவுடலுக்கு வணக்கஞ்செலுத்துவதற்காக அவர் அன்று சாயந்தரம் அர்ச். பேதுருவானவர் மகாலயஞ்சென்ருர்.

# அர்ச். அந்தோனியார் பிறந்த இல்லம்

அர்ச். அந்தோனியார் பிறந்த இல்லமானது லிஸ்பன் நகரில் இன்னுமே பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இஃது **“இக்றிகா டே சான்ரோ அன்ரோனியோ டாசி”** என அறியப்படுகின்றது. அவர்மரணித்துச் சரியாய் ஒருவருடம்சென்றபின் —அதாவது 1232-ம்ஆண்டுஅவர் அர்ச்சியசிட்டபட்டம் அருளப்பட்டதும் அவர்பிறந்த இல்லத்தின்மேலாக ஓர்கோவில் கட்டியெழுப்பப்பட்டது. அங்ஙனம், கட்டியெழுப்பப்பட்டதும் ஏறக்குறைய உடனேதானே அஃது ஓர்யாத்திரைத்தலமாயிற்று. 1433-ம் ஆண்டு நான்காவது ஈயூஜின்பாப்பானவர்முதல் 1799-ம் ஆண்டு ஆருவதுபத்திநாத பாப்பானவர் வரையில் திருச்சபையை ஆட்சிசெய்த பாப்புமார்அநேகர் அதில் செபித்துவந்த விசுவாசிகளுக்கு அநேகபலன்களை அளித்திருந்தார்கள். அக்கோவிலின் நிலவறையிலே அர்ச். அந்தோனியார் 1195-ம்ஆண்டு ஆவணிமாதம் 15-ந்திகதியாகிய பரிசுத்த தேவதாயாரின் மோட்சாரோபண திருநாளன்று பிறந்தஅறை இன்றுவரைபூச்சியமாகக் காப்பாற்றப்பட்டுவருகிறது. அதன் பலிபீடமானது குழந்தைகிறீஸ்துவைத் தனதுகரங்களில் ஏந்தியுள்ள அதிகம்பழைமையான அவ்வர்ச்சியசிட்டரின் சுரூபம்ஒன்றைக் கொண்டுவிளங்குகின்றது. முதலாவதுகோவில் 1775-ம்ஆண்டு ஏற்பட்ட பெரியபூகம்பத்தினுல் லிஸ்பன்நகரின் பெரும்பகுதியுடன் அழிந்துபோக, அதனிடமாக ஓர்புதியகோவில் கட்டியெழுப்பப்பட்டு, போர்த்துக்கேயசிற்பிகளின் சிறந்தசிற்பசித்திர வேலைப்பாடுகளைக்கொண்டதாயும் இன்று ஓர்தேசியஞாபக சின்னமாயும் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 18-ந் திகதி

## மிஷன் ஞாயிறுவும் நமது கடமையும்

பரிசுத்தபிதாவின்பிரத்தியேக வேண்டுகோளுக் கிசைந்தே மிஷன்ஞாயிறு அனுசரிக்கப்பட்டு வருகிறது. அவர் இலட்சாதிலட் சக்கணக்காய்வாழும் பிறசமயத் தவர்களுக்காகச் செபத்திலும், தருமத்திலும் முனைந்துநிற்கும் படி கத்தோலிக்க மக்களையெல் லாம்அன்பாய்ஏவுகின்ருர்.இந்த வேலை எத்துணைபாரியதென் பதை அண்மையிலே அவர் நினைவூட்டியிருக்கிருர் "நிறை வேறியஊழியமோ மிகச்சிறந் தது; எஞ்சியிருப்பதோ மறக் கற்பாலதன்று; விசுவாசசுட ரையும், உண்மைவிளக்கையும், அன்பின்அனலையும் தூரதே சங்களில்வதியும் மக்களுக்குக் கொண்டுசெல்லும் பரோபகாரி களான மிஷனறிமார்களை ஏராளமானசனத்திரள் காத் துக்கொண்டிருக்கிறது" என அவர்கூறுகிருர்.

சாதி, சமய, நிறபேதமின்றி யே ஒவ்வொருமனிதனும் தேவ சாயலாக உண்டாக்கப்பட்டிருக் கிருன். உலகத்திலுள்ள எந்தப் பொக்ஷத்திலும்பார்க்க அவனு டைய ஆத்துமமே அதிகமதிப் புள்ளது. அவன் இங்குசீவிக்கும் நோக்கமும் ஒன்றேதான். அஃது தன்னைப்படைத்தவரை— உண்மையானதேவனை அறிந் து நேசித்துச் சேவித்துத் தனது, ஆத்துமத்தை நித்திய சீவியத்துக்கு ஆயத்தப்படுத்து வதேயாகும். ஒவ்வொருமனித னுக்கும் இரட்சணியஉதவி யளிக்கத் தேவன் தமதுதிவ்விய சுதனைத் தந்திருக்கிருர். அம் மட்டுந்தானு? அன்று. ஓர்வழி யையும் வகுத்து, அவ்வழிச் செல்ல மட்டற்றஉதவியையும் அவர்தருகிருர். நாம் விசுவாச மென்னும் பரமகொடையைப் பெற்றிருக்கிறேம். ஆயின் உலகமக்களில் மூன்றிலொரு பகுதியினர் அதனை இன்னுமே அடைந்திலர். அவர்கள் அதைஅடையச்செய்வது எமது பொறுப்பாகும்.

"நீங்கள் உலகமுழுவதிலுஞ் சென்று ........ எச்சிருட்டிக்கும் சுவிசேஷத்தைப்போதியுங்க" ளென்று யேசுபெருமான் திரு வாய்மலர்ந்து ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன.

இது எம்மெல்லோருக்கும்— உங்களுக்குமே அவர்விடுத்த கட்டளை. ஓர்உடன்பாடான கட் டளை. "இணக்கமிருந்தால் போ", அன்றேல், "நல்ல தென்று நினைத்தால் போ", அன்றேல், "உன் அலுவல் களைப் பார்த்தபின் போ" என் று அவர்சொன்னுரில்லை. ஏதுவரினும், எதைத் தியாகஞ் செய்ய நேரிடினும் தயங்காமல் "போ"என்ற தேவகட்டளை.

நாம் செய்யவேண்டியது என்ன? உலகமுழுவதிலும் கத் தோலிக்க வேதபோதகரும், அவர்களின் துணைவரும் செய்து வருகின்ற மாபெருந்தொண் டைப்பற்றி நன்கறிந்த கத் தோலிக்கமக்கள் மிகச்சிலரே. வேதபோதக திருவூழியத்திலே கரிசனைகொள்ளுமுன இவ்வள வும் செய்ததென்னவென்று அறிதல்அவசியம். திருவூழியர் படும் சஷ்டநட்டங்களையும அறி தல்வேண்டும். ஆகையால், அதைப்பற்றிய பிரசுரங்களை வாசித்தறிதல் இன்றியமையா தது.

வேதபோதகர்களின் வேலை தேவனுடையவேலை. இவ் வேலைக்குத் தேவையானஉதவி தேவனிடமிருந்து முதல்வர வேண்டும். பின்னர்தான் பிற ரைநாடவேண்டும். ஆகையால் இப்பாரியவேலைக்காக நாடோ றும் செபியுங்கள். நீங்கள்படும் துன்பவேதனைகளை உங்களிலும் அதிகம் துன்பப்படுவோருக்காக ஒப்புக்கொடுங்கள்.

கிறீஸ்துநாதரை அறியாத வர்களுக்கு அவரைவெளிப்படுத் தக் கிறீஸ்துவநாடுகளிலிருந்து அநேகர் செல்கின்றபோதிலும் வேதபோதகர்கள் அதிகமதிகந் தேவைப்படுகிருர்கள். இந்தியா விலும், இலங்கையிலும் 850கத் தோலிக்கருக்குச் சேவைசெய்ய ஒருகுருவானவர்மாத்திரமே உண்டு. ஆதலின்அவர் எமது திருவேதத்திற் சேரவிரும்பும் அநேகரைக் கவனிக்கமுடியாத வராய் இருக்கின்ருர். முன்னர் சீனுவில் எழுநூறுகத்தோலிக் கருக்குச் சேவைபுரிய ஒருகுரு வானவர்மாத்திரமே இருந்தார். தற்பொழுது அந்நிலைமாறிவிட் டது. "அறுப்புமிகுதி; ஊழி யரோசொற்பம்; "அநேகஊழி யரை அறுவடைக்கு அனுப்பும்படி வேளாண்மையின் எசமானை வேண்டுங்கள்" (மத். 4:37.)

வேதபோதக மிஷனறிமார் தக்கநிலைமையிலிருந்து தங்கள் வேலையைச் செய்யவேண்டுமா கில் அதற்குக் கைப்பொருள் வேண்டும். வேதபோதகரைப் பயிற்றி, வேதபோதகநாடுகளில் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யும்பொறுப்பு மிஷ னறியசபைகளைச் சார்ந்தது. ஆயினும் அவர்கள் எல்லோரும் பாப்பரசரின் வேதபோதகசபையின் உதவியையே எதிர்நோக்குகின் றனர். இந்தச்சபையும் சொற்ப உதவியே செய்யக்கூடிய நிலையி லிருக்கிறது. மிகுதியை எங்கி ருந்துபெறுவார்கள்? அவர்கள் கட்டவேண்டிய கோயில்களுக் கும், நடாத்தவேண்டிய பாட சாலைகள், அநாதசாலைகள், தொழுநோயாளர் சாலைகள், மருந்துவழங்கும் நிலையங்கள் முதலியனவற்றிற்கும் வேண் டிய நிதியை எங்கிருந்து பெறு வார்கள்? நீங்களே இயன்றளவு உதவுங்கள். அவர்களை உங்கள் பதில்மிஷனறிமார் ஆக்குங்கள். வேதஊழியரின் பரித்தியாகத் தில் பங்கெடுப்பவன் அவர் களின் சம்பாவனையிலும் பங்க [illegible]



## சதாசகாயமாதா கோணம்

—:—

### அற்புதமான ஒத்தாசை

என் அருமைத்தாயாரே! இதோ! உமது திருப்படத்தின்முன் முழந்தாட் படியிட்டு என் நன்றித்துதியைச் சமர்ப் பிக்கின்றேன். நீர் எனக்கு இதுகால வரைசெய்துள்ள நன்மைகளோ அனந் தம். ஆனல், எனக்குத் தாயாரே! நீர் ஒருஉத்தியோகம் பெற்றுத்தந்தது உண்மையாகவே ஒருபெரும் புதுமை. இதற்கும் என் இதயபூர்வமான நன்றி யைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மூன்றுவருடங்களின்முன் பெரும் மனக்கவலையுடன் நான் என் உத்தியோக பதவியை இழக்கநேர்ந்தது. நான் ஓர் குடும்பஸ்தன். எனதுஆதரவில் என் மனைவிஉட்பட மூன்று ஆத்துமங்கள் என்கையைப் பார்த்தவண்ணம் இருந் தார்கள். இவர்களும், நானும் பட்டுக் கொண்டிருந்த துயரத்தையும், உபத் திரவங்களையும் என்னுற்சகித்துக்கொள் ள முடியவில்லை. என்னைத்திரும்பவும் வேலைக்கமர்த்திக்கொள்ளும்படி நான் பண்ணியமனு நிராகரிக்கப்பட்டு விட் டது. நான் அனுபவித்த துக்கமோ பெரிது. நம்பிக்கைஎன்பது என்னி டம் விடுதலைபெற்றுவிட்டது. எனவே, வீட்டைவிட்டு வெளிக்கிளம்புவதென் றும், திரும்பி வருவதில்லையென்றும் தீர்மானம் செய்துகொண்டேன்.

என்உறவினர் ஒருவரால் எனக்குக் கொடுக்கப்பட்ட உமது நோவனைச் செபப்புத்தகம் ஒன்று என்கைவசம் இருந்தது. கொழும்புநகருக்கு வந்த தும் உம்மைக்கடைசியாகத் தரிசிக்க வேண்டும்என்ற ஆசை ஏற்பட்டது. ஆனல், அது ஒருபுதன்கிழமை அல்ல. என்றுலும், நான் முன்னெருபோதும் வேண்டிக்கொள்ளாதவிதமாக உமது சந்நிதியில் வேண்டிக்கொண்டேன். எனக்கு ஏதோ ஒரு தொழில் தந்துத வும்படியும், என்னுடையவும், என் குடும்பத்தவர்களுடையவும் சீவனைக் காப்பாற்றிக்கொள்ளும்படியும் இரந்து மன்றுடினேன். என் அருமைத் தாயா ரே! எனக்கு நீர்செய்துள்ள உதவியை நான் என்னென்பேன்? உண்மையில் அது ஒருபுதுமை என்பதற்குச் சந்தே கமேயில்லை. அன்று தினமே என் இனத்தவரொருவரிடம் நான் ஒரு தொகைப்பணம் கடனுகப் பெற்றுக் கொண்டேன். இஃது என்வாழ்வுக்கும் சாவுக்கும் சாதகமாகவிருந்ததென்று சொல்லவும்வேண்டுமா? இந்தநிலைமை யில் நான்வீட்டுக்குத்திரும்பவும், முன் சமாளிக்கமுடியாதிருந்த நிலைமையைச் சமாளிக்கவும் தகுதியுடையவனுக இருந்தது ஆச்சரியமல்ல.

நான் உம்மைத்தரிசித்த ஒருகிழ மைக்குள் என்குடும்பமும், நானும் ஒருமித்துவாழ ஒத்தாசை செய்தீர். அதுவுமல்லாமல் என் பாரியாருக்கு ஒருஉத்தியோகமும் பெற்றுத்தந்தீர். இஃது எங்கள் நிலைமையைத் திருத்து வதற்கு எவ்வளவோ உதவியாயிருந் தது. அன்றுதொட்டு ஒவ்வொரு நாளும் நான்வேலையில்லாதிருந்தாலும் உமதுசகாயம் எங்களை ஆட்கொண்ட து. என்றுலும் எனக்கும் ஓர்வேலை பெற்றுத்தரவேண்டும் என்று ஓயாது உம்மண்டைவந்து ஓயாது அலட்டி னேன்.

என் வேண்டுதலைத் தாயாரே! நீர் உடனுக்குடனேதானே தாச்சித்தங் கொண்டீர். உமது நோவனைக்குச் சமுகந்தந்து திரும்பும்போது, நான்தற் போதுவகிக்கும் உத்தியோகத்துக்குரி ய விண்ணப்பப்பத்திரம்ஒன்று எனக் குக் கிடைத்தது. அடுத்தபுதன்கிழமை நேர்முகப்பரீட்சைக்கு நான் தோன்ற வேண்டுமென அறிவித்தல் கிடைத் தது.

நேர்முகப்பரீட்சை முடிந்தபின் அடுத்தகிழமை முடிவுதெரிவிப்பதாகக் கூறினுர்கள். அதன்படி என்னைக் கந் தோரில் சமுகம்கொடுக்கும்படி தெரி வித்து ஒருகடிதங்கிடைத்தது. அது வும் ஒருபுதுமைப் புதன்கிழமையே. ஒருவிதமான சோலிசுரட்டும் இல்லா மல் உடனடியாகவே வேலையில்அமர்த் தி விட்டார்கள். என்னிலும் பார்க்க எல்லாவகையிலும் திறமையுடைய எத் தனையோபேர் மனுப்பண்ணியிருந்தும் நான்மாத்திரம் தெரிவுசெய்யப்பட்ட மைக்குநியாயம் நீரல்லாது வேறெவரு மில்லையென நான்மாத்திரமல்ல, ஏனை யோரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். உண்மையாகவே என்மாட்டு நீர் காட் டியதயவு பெரும்புதுமைஎன்று பூர ணமாக நம்புகிறேன். என் தாழ்மை யான நன்றியைத் தெரிவிக்கிறேன். தாயே! என்றும் உம்மை வாழ்த்திப் போற்றுவேன். இன்றும் என்றும் என்னையும், என்குடும்பத்தையும் உமது அடைக்கலத்தில்வைத்துக் காப்பாற்றி யருளும்.

("நோவனைப்புதினம்" எனும் ஆங் கிலப் பத்திரிகைக்குத் திரு. சி. ஜே. ஹாமர்என்பவர் எழுதியனுப்பிய நன் றித்துதியின் தமிழ்ச்சாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

—:—

### மாற்றமுடியாததல்ல

பாராளுமன்றத்திலே பருத்தித்துறைப் பிரதிநிதியான திரு. பி. கந்தையா அவர்கள் சென்றசனிக்கிழமை மட்டக்களப்புக்குச் சென்றிருந்தபோது பத்திரிகைநிருபருக்கு அளித்த செய்தியிலே, “சிங்களம்மட்டும்” சட்டம் மாற்றமுடியாத ஒன்றென நான் நம்பவில்லை; சமூகத்தில் சகலசட்டங்களும் மாற்றப்படக் கூடியனவே; “சிங்களம்மட்டும்” சட்டத்தை ஏன் மாற்ற முடியாது என்பதற்குக் காரணம்எதுவும் எனக்குத்தெரியவில்லைஎனக் கூறியிருக்கின்றார்.

### தமிழ்தெரியாத போலிசார்

அக்கரைப்பற்று வட்டாரத்தில் நூற்றுக்குத்99விகிதம் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்தபோதிலும் அங்குள்ள பொலிஸ்ஸ்ரேஷனில் நியமனஞ்செய்யப்பட்டுள்ள சாதாரணபொலிஸ்உட்படப் பொலிஸ்இன்ஸ்பெக்றர்வரை தமிழ்தெரியாதவர்கள். அதனால் அக்கரைப்பற்றுப்பொலிஸ்ஸ்ரேஷனுக்குத் தமிழ்ப்பேசும் பொலிசாரை நியமனஞ் செய்ய வேண்டுமெனக்கேட்டுச் சென்றசனிக்கிழமை நடந்தேறிய அக்கரைப்பற்று மத்தியகிராமச்சங்க கூட்டத்தில் ஓர்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

### தமிழரசுக்கட்சியின் ஆயத்தம்

தமிழ்ப்பேசும்மக்கள் பிரதானமாகவுள்ள பகுதிகளில்நடக்கும் தலதாபன தேர்தல்களில்—அதாவது, நகரசபை, பட்டினசங்க, கிராமச்சங்க தேர்தல்களில்கலந்து தனது அபேட்சகர்களை நியமிக்கத் தமிழரசுக்கட்சியின்நிர்வாக கம்மிற்றி தீர்மானித்திருக்கிறது. இதற்கென அது தலதாபன தேர்தல் சபை ஒன்றையும் நியமித்திருக்கிறது. இந்தச்சபை தமிழரசுக்கட்சியின் கிளைஸ்தாபனங்களுடன் கலந்தாலோசித்துத் தேர்தலிலே அபேட்சகர்களை நியமிப்பதுசம்பந்தமான முடிவுகளைச் செய்யும்.

### சிங்களப் பாடபுத்தகம்

ஆங்கிலத்திலே சரீரசாஸ்திர பாடபுத்தகமொன்றின் விலை 60ரூபா; ஆனால், சிங்களத்தில் அதனைப்பிரசுரஞ் செய்கிறதானால் 600ரூபா செலவேற்படுமென்று இலங்கைச் சர்வகலாசாலையின் விஞ்ஞான கலாசங்கத்திலுள்ள விஞ்ஞானகாரியாலய அதிகாரி ஒருவர் அபிப்பிராயந்தெரிவித்திருக்கிறார். இந்தக் கலாசங்கத்தைச்சேர்ந்த பேராசிரியர்களும், போதகாசிரியர்களும் சென்றவியாழக்கிழமைகூடிச் சர்வகலாசாலையிலே சிங்களத்தைப் போதனாமொழியாகக் கொண்டுவரும் விஷயமாய்க் கலந்துவாதித்தபோதுதான் அவர் இவ்விதம் தெரிவிக்கலாயினர்.

### வவுனியாச் சிங்களஊர்வலம்

பாவற்குள குடியேற்றதிட்டப் பகுதியிலிருந்து வவுனியாப்பட்டினத்திற்குச் “சிங்களம்மட்டும்” என்ற ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு லைசென்ஸ் அருளுமாறுகேட்டுச் செய்யப்பட்ட மனுவொன்றைப்பொலிசார்நிராகரித்துவிட்டார்கள். அதற்குக்காரணம், இந்தஊர்வலம் தமிழ்க்கிராமங்களுக்கூடாகச் செல்லவிருப்பதேயாகும். ஐயரத்னபூங்காவில் ஆட்சேபனைக் கூட்டம்ஒன்றை நடத்துவதற்கு அனுமதி கோரி வவுனியாப்பட்டினசங்க தலைவருக்குச் செய்யப்பட்ட மனுவொன்றும் இதற்குமுன் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்தமனுக்கள் தற்போது பிரதமரின் கவனத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## மிருகத்திற்காக மனிதனா?

இந்தியாவிலே குருவாயூரில் ஓர்யானைநோயுற்றிருந்தது. நரபலிகொடுத்தால் யானை குணமடையுமெனநம்பி அந்தயானையின் சொந்தக்காரர் காசியெனும் ஒரு சாதுவை வெட்டித் தலையை ஒரு இடத்தில் பதுக்கி வைத்து,உடலைவேறோர்இடத்தில் புதைத்துவிட்டார். தலையைப் பிறகு யானை இருக்குமிடத்திலே புதைக்கவேண்டுமென்று அவர் திட்டமிட்டிருந்தாராம். சாது திடீரென மறைந்ததையிட்டும், ஓரிடத்தில் இரத்தக்கறை படிந்திருந்ததை யிட்டும் சமுசயப்பட்ட பொலிசார் விசாரணைசெய்து உடலையும், தலையையும் கண்டுபிடித்தனர். யானையோ இறந்துவிட்டது. சில காலமாகத் தினசரிப்பத்திரிகைகளை எடுத்தால் கொலை, தற்கொலைச்செய்திகளை அதிகமாகக்காண்கிறோம். விரோதத்தால், அல்லது பணத்திற்காக, நகைக்காகமனிதன் மனிதனைக்கொல்வதைப்பற்றி ஏறக்குறையத் தினந்தோறுமே செய்திகள் வாசித்துவருகிறோம். இதோ! ஒருமிருகத்திற்காக மனிதன் கொல்லப்படும் காலம் வந்துவிட்டது.



எஸ்கிமோ சாதியாருக்குப் பாப்பரசரின் ஆசீர்வாதம். அலஸ்கா நாட்டின் பிரசித்திபெற்ற தேச ஆராய்ச்சியாளரான வண. ஹக்காட்சுவாமியார் பீறிங் கடற்கரைநீளமும், வடசமுத்திரக் கரைநீளமும் பரந்துவசிக்கின்ற எஸ்கிமோசாதி மக்களுக்கு அவரின் விசேஷ ஆசீர்வாதத்தைப் பெறுகின்றார். எஸ்கிமோவர் ஒருவரால் செதுக்கப்பெற்றுத் தமக்கு அன்பளிப்புச் செய்யப்பெற்ற கிறீஸ்து இராசாவின் திருச்சுரூபம்ஒன்று பரிசுத்தபிதாவின் கரங்களில் இருக்கின்றது.

### தமிழ்மொழிக்கு உரிமையா?

“மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமைப்பிரச்சினையையும், ஏனைய லட்சியங்களையும் தமிழரசுக்கட்சி கைவிடும்பட்சத்தில் தமிழ்மொழிக்கு உரிமைவழங்கத் தாங்கள் தயாராயிருப்பதாகப் பிரதமர்பண்டாரநாயகா தற்போது மறைமுகமாகத் தெரிவித்து வருகிறார்; இந்தச் சதித்திட்டத்தின் அந்தரங்கநோக்கம் என்னஎன்பதை நாம் அறிவோம்; தமிழ்அரசுக்கட்சி தனது லட்சியங்களில் எதையுமே இறுதிவரை கைவிடமாட்டாது; மலைநாட்டில்வாழும் நமதுசகோதரர்களின் உரிமைக்காகப்போராடுவதை எமது முக்கியகடமைகளில் ஒன்றாகக் கொண்டுள்ளோம்என்பதைத் திரு. பண்டாரநாயகாவுக்கும், அவரது சர்வசிங்கள அரசாங்கத்துக்கும் மீண்டும்நினைவூட்ட விரும்புகிறேன்” என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், எம். பி. அவர்கள் சென்றசனிக்கிழமைமாலை கோப்பாய்த்தொகுதியைச்சேர்ந்த இடைக்காடுஎனுங்கிராமத்தில் நிகழ்ந்தபகிரங்க கூட்டம்ஒன்றில் பேசியிருக்கின்றார்.

### மாட்டுவண்டிகளுக்குரையர்கள்

கொழும்புநகரசபை எல்லைக்குள் நடமாடித்திரிகின்ற மாட்டுவண்டிகளுக்குத் தற்போது பாவிக்கப்பட்டுவரும் இரும்புவளையங்கள் பொருந்திய மாச்சிற்களுக்குப்பதில் ஓர்மற்றிக் என்ற காற்றடிக்கும்ரையர்கள் பிரயோகிக்கப்படும்போல் இருக்கிறது. இதற்கேற்படும்செலவில் ஒருபகுதியைஅரசாங்கம் பொறுக்கும். சில்லுகளுக்குப்பதில் மாட்டுவண்டிகள் இந்தரையரைப் பாவிக்கத்தக்கதாய் அரசாங்கம் அவைகளுக்குச் சகாயப்பணம் வழங்கவேண்டுமென்று தான்சிபாரிசுசெய்யப்போவதாகப் போக்குவரத்துமந்திரி தீர்மானித்திருக்கின்றார். இத்தாலே வீதிகளைத் தேயாமலும், வெடித்துப் பிளவுபடாமலும் பாதுகாத்துக் கொள்ளலாமாம்.

### கொழும்புநகரசபைத் தேர்தல்

கொழும்பு முனிசிப்பல்சபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக முன்வருகிறவர்கள் தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம் இம்மாதம்30-ந்திகதி செவ்வாய்க்கிழமையாகும். அன்றுதினம்காலை கொழும்பு நகரமண்டபத்திலே காலை 9மணிக்கும் 10மணிக்குமிடையிலும், 12மணிக்கும் 1மணிக்குமிடையிலும், பிற்பகல் 3 மணிக்கும் 4மணிக்குமிடையிலும் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். எல்லாவட்டாரங்களுக்குமே அபேட்சகர்கள் போட்டியிடுகின்றார்கள். ஐக்கியதேசியக்கட்சியும், லங்கா சமசமாஜகட்சியும், கம்யூனிஸ்தகட்சியும் ஏற்கனவே தத்தம்அபேட்சகர்களைத் தெரிவுசெய்துள்ளன. எம். ஈ. பி. என்ற மக்கள்ஐக்கிய முன்னணிக்கட்சி இன்னும் அபேட்சகர்களைத் தெரிவுசெய்திலது.

### கச்சேரிகளில் சிங்களம்மட்டும்

மாகாண நிர்வாகத்திலும் தேசியபாஷையில் அலுவல்களைநடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்க உத்தியோகபாஷைப்பகுதி செய்துவருகின்றது. இந்தஏற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் கச்சேரிகளுக்கும், மத்திய அரசாங்கத்துக்குமிடையேகடிதப்போக்குவரத்துகள் உத்தியோகபாஷையிலே நடத்தப்படும். கச்சேரிகளில் தனிச்சிங்களத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலே ஓர்முதல்நடவடிக்கையாகக் கச்சேரிகளைத்தரிசித்து, உத்தியோகபாஷையை நடைமுறைக்குக் கொண்டுவரும்விஷயமாய் அவற்றின் தேவைகளைக் கண்டறிந்துவருமாறு இருவரைக்கொண்ட கோஷ்டிஒன்றை உத்தியோகபாஷைக்கம்மிஷனர் அனுப்பிவைத்திருக்கின்றார் ஏற்கனவே இவர்கள் கண்டி, களுத்துறைக் கச்சேரிகளைத் தரிசித்திருப்பதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திமாவின் மூன்றாவது இரகசியம்

— எம். ஜெயம் —

பாத்திமாவிலே 1917-ம் ஆண்டு பரிசுத்தகன்னிகையின் காட்சிபெற்ற மூன்று பிள்ளைகளுள்ளும் தற்போது சீவனோடிருப்பவள் லூசி சாந்தோஸ் மாத்திரமே. இவள் கார்மேல்சபையிற் சேர்ந்து கன்னியாஸ்திரியாயிருக்கின்றாள். இவள் இருந்துவருமமடம் புராதனபோர்த்துக்கேய சர்வகலாசாலைப் பட்டணமாகிய கொயிம்பிறாவிலிருக்கிறது. இந்தமடத்தில் லூசி உலகத்துக்கு முற்றாகமறைந்தவளாய்ச் செபத்திலும், தியானத்திலும் தனதுசீவியத்தைக் கழித்துவருகிறாள்.

தான் ஒருதீர்க்கதரிசியென்று உலகில் பிரசித்தமாக வெளிப்படுவது தேவதிருவுளமல்லவென்று லூசிஎண்ணுகிறாள். "ஒருநூதனமான—முன்னறியாத வெளிச்சம் வானத்திற் காணப்படும்போது" அது உலகத்தைச் சர்வேசுரன் யுத்தத்தால் தண்டிக்கப்போகிறார் என்பதற்கு அறிகுறியாகுமென்று எமதுஆண்டவள் 1917-ம் ஆண்டு தனக்குஅறிவித்ததாக அவள்கூறுகிறாள். ஐரோப்பாக் கண்டத்தில் காணப்பட்ட அதிகந் துலக்கமான வடதுருவ வெளிச்சம் 1938-ம் ஆண்டு தைமாதம் 24-ம், 25-ந் திகதிகளிலே காணப்பட்டது. இந்த வெளிச்சமே முன்னர் தனக்கு அறிவிக்கப்பட்ட அறிகுறியெனக் கருதியலூசி 1917-ம் ஆண்டு கிடைத்தசெய்தியை அதிகாரிகளுக்கு அறிவித்தாள். ஹிற்லரின் படைகள் ஆணற்றிருந்த ஆஸ்திரிய பிரதேசத்தினுள் 1938-ம் ஆண்டு பங்குனிமாதம் 11-ந் திகதியன்று உட்பிரவேசித்தன.

1939-ம்ஆண்டு கருதினால்எயுஜேனியோ பச்செல்லிஆண்டவர் 12-ம்பத்திநாத பாப்பரசரானபொழுது, ருஷிய தேசத்தைத் தமதுமாசற்றஇருதயத்திற்கு அர்ப்பணஞ்செய்ய வேண்டுமென எமதுஆண்டவள் 1917-ம்ஆண்டு கேட்டுக்கொண்டதைத் தனது ஞான அதிகாரிகளின் ஏவுதற்படி லூசி பாப்பரசருக்கு அறிவித்தாள். அவர் 1952-ம்ஆண்டு ருஷியமக்கள் எல்லோரையும் மரியாயின் மாசற்றஇருதயத்துக்கு விசேஷகாணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்.

இரகசியஅறிவித்தலில் ஒருபகுதி இன்னும்இரகசியமாகவே இருந்துவருகிறது. 1917-ம்ஆண்டிலிருந்து அது மறைபொருளாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தஇரகசியத்தைப் பற்றிப் பலரும்பலவாறாய் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தஅபிப்பிராயங்களுள் சில எம்மைத்திடுக்கிடவுஞ் செய்யக்கூடியனவாகும்.

மூன்றாவதுஇரகசியத்தைப் பரிசுத்த பாப்பரசர் வாசித்ததும் விம்மிஅழுது முழங்காலில்விழுந்து செபித்தார் என்று நம்பகமானவட்டாரங்கள் கூறின. உலகத்தில் ஒருவருக்குமே இவ்விரகசியம் தெரியாதென வேறு நம்பத்தக்க செய்திகள்கூறின. உலக முடிவின்திகதி அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்று ஒருசிலர்கூற, அது அந்திக்கிறீஸ்துவின் வருகையைப் பற்றியதென்று வேறுசிலர் பதட்டத்துடன் கூறினர். இன்னுஞ்சிலர் கடந்த சம்பவங்களே அதிற்குறிக்கப்பட்டிக்கும் என்றார்கள்.

அந்தஇரகசியவிடயம் லேயிறியாவின் மேற்றிராணியாரிடம் இருக்கிறதென்றும், 1960-ம்ஆண்டுவரை அது வெளிவராதென்றும் எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அதை வெளியிடுங்காலத்தை அவர் பின்போட்டுவைக்கவும் கூடுமென்று ஒரு பத்திரிகை சமாச்சாரம்வெளியிட்டது. ஏதேனும் இரகசியமென்றால் அது யாதாயிருக்குமென்று அறியவிரும்பிய சிலர் போர்த்துக்காலுக்குச் சென்றார்கள்.

பாத்திமாவில் தரிசனம்நிகழ்ந்த காலத்தில் லேயிறியாவில் மேற்றிராணியார் இருக்கவில்லை. 1910-ம் ஆண்டு போர்த்துக்கால் அரசாங்கம் கத்தோலிக்கசமயத்தைத்தேசப்பிரஷ்டம்செய்திருந்தது. ஆயினும், 1920-ம் ஆண்டின் வைகாசியிலே 15-ம்ஆசீர்வாதப்பப்பாப்பாணவர் லேயிறியாமேற்றிராசனத்தைத் திரும்பவும் ஏற்படுத்தி டொம் (சுவாமி) யோசை அல்வெஸ் கொறையா தா சில்வா அவர்களை அதன்மேற்றிராணியாராக நியமித்தார். பாத்திமாவின் எதிர்காலத்தை நிரைப்படுத்த நியமிக்கப்பட்டவர் ஓர் சாதாரண பேர்வழியல்ல. நாற்பத்துமூன்றுவயதாயிருந்த டொம்யோசை கல்விகேள்விகளிற் சிறந்தவராயும், மாதாபத்தி மிகுந்தவராயுமிருந்தார். வேதகலாபனையின்போது எண்ணற்ற மணித்தியாலங்களாகக் குளிர்ந்ததண்ணீரில் நிற்கவேண்டியிருந்ததால் அவருடையகால்கள் விறைத்துப்போயினவென்று சிலர்சொல்லுகிறார்கள். இன்று அவர்நொண்டியாகச் சில்லுப்பூட்டிய கதிரையில் சீவித்துக்கொண்டிருக்கிறார். பனிமயமாதாவை மன்றாடியதால் அரசாங்கத்திடமிருந்து தமதுசுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார். அதற்கு நன்றிகூறுமுகமாக அவர் லூர்துதிருப்பதிக்கு ஆறுமுறை யாத்திரைசெய்து போர்த்துக்காலுக்காக வேண்டிக்கொண்டார்.

1920-ம் ஆண்டு லேயிறியாவின் மேற்றிராணியாரானதும் டொம்யோசைஆண்டவர் பாத்திமா விவகாரங்களைத் தாமே பொறுப்பேற்றுக்கொண்டார். லூசியை விடுதிப் பாடசாலைக்கும், பின்னர் தியானயோக மடத்திற்கும் அனுப்பினவர்இவரே. காட்சிகளின்மெய்மையை ஆராயக் குழுவொன்றை நியமித்தவரும் இவரே. பக்தியும், விமரிசையும் நிறைந்தஇவர் பாத்திமாமாதா பதியிலே பிரசித்தமாகப் பக்தியனுசாரங்கள்நடத்த 1930 ஐப்பசிவரைக்கும்—அதாவது சூரியன் சுழன்றபுதுமைநடந்து 13 வருடங்கள் மட்டும் உத்தரவுதந்தாரில்லை.

இவரதுமதியூகமான விசாரணையின்கீழ் பாத்திமா வளம்பெற்றது. எழுவாயிலிருந்தே இத்திருசேத்திரம் வருவாய்க்குரியதோர் நிலையமாகாமல் இவர் பார்த்துக்கொண்டார். தற்கால நவீன "வசதிக"ளை ஏற்படுத்தமறுத்தார். வாடிவீடுகள், விடுதிச்சாலைகள் பாத்திமாவில்கிடையா. சில தங்குமடங்கள்தான் உண்டு. செபமாலைக் கடைகளும்உண்டு. சந்நியாச,கன்னிகா மடங்களும், சில வீடுகளுந்தான் அங்குள்ள புதியகட்டடங்கள். பாத்திமாவில் வியாபாரஞ்செய்து முதலைப் பெருக்க இடந்தரமாட்டார் டொம்யோசை. இவரிடந்தான் மாதா தாக்குத்தந்த கடைசிஇரகசியத்தை ஒப்படைத்திருக்கிறாள் லூசி.

இந்தஇரகசியத்தை அறியவிரும்பியவர்கள்சிலர் லேயிறியாவுக்குப் புறப்பட்டனர். மேற்றிராணியாரின் காரியாலயம் சுயசிந்தனையற்ற ஓர்பேராசிரியரின் அறைபோன்றிருந்தது. அதிலே அதிகபுத்தகங்கள் படைபடையாய் அடுக்கப்பட்டிருந்தன. அறையின் நாலுயன்னல்களும் பூட்டப்பட்டிருந்தன. மேலைசகளில் மாத்திரமல்ல, கதிரைகளிலும் ஒரேபுத்தக, பத்திரிகைக்குவியல. ஒழுங்கற்றதன்மையாய் அவரதுகாரியாலயம் காட்சியளித்தாலும் எந்தநூல் அல்லதுபத்திரிகை எங்கிருக்கிறதென்று டொம்யோசை ஆண்டவருக்கு நன்றாகத்தெரியும்.

எழுபத்தாறுவயதினரான டொம்யோசைஆண்டவர் மிகவும் பலங்குன்றிப் போயிருக்கிறார். கைவிரல்களில் வாதம், கண்ணொன்று கெட்டுவிட்டது. அவரின் நரைதிரையும், வட்டமுகமும் அமைதியைக் குறிக்கும். முகபாவம்



வேறுபட்டால் அது இரக்கக்குறியென்று ஒற்றைக்கண்ணின் கனிந்த பார்வை விளக்கும்.

வந்தனங்கூறிவிட்டு, வந்தகாரணத்தைக் கூறினார்கள் வந்தவர்கள். "பாத்திமாசெய்தியைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? அது உலகத்துக்கு உண்மைச்சமாதானத்தைத் தருமா?" என்று மேற்றிராணியாரைக் கேட்டார்கள்.

தம்முடையதேசத்தைப் பொதுவுடைமை அழுங்குப்பிடியாய்ப் பிடித்ததையும், அதனால் அது பட்டபாட்டையும் பின்பு சமாதானமும், தேவவழிபாடும் எப்படித் திரும்பியதென்பதையும் கண்கூடாக்கண்டவர் இவர் அல்லவா?

"போர்த்துக்காலின் புனரமைப்பிலே பாத்திமாநாயகியின் பொறுப்பு எவ்வளவு? அல்லது பொதுவுடைமை தானாகவே அழிந்துபட்டிருக்குமா?"

"ஒருபோதுமில்லை; அவதான் எமதுநாட்டைப் பாதுகாத்தவ" என்று வந்ததுவிடை. "நடந்தேறிய மாற்றங்களுக்கு அவதான் பொறுப்பாளி. அரச, ஒழுக்க, சமூக, ஆத்மார்த்தமாற்றங்கள்எதுவும்அவவின்றி நடந்திராது."

"பிறதேசங்களும் போர்த்துக்காலைப் போல் பாத்திமாசெய்தியைப் பின்பற்றினால் அமைதிநிலை வந்துகைகூடுமா?"

இரக்கத்தைக்குறிக்கும் புன்முறுவலுடன் "கட்டாயம்" என்றார்.

"வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்கள் ஒவ்வொன்றும் சண்டைகாலத்திலும், சமாதானகாலத்திலும் உலகின் கதி என்னவாகுமென்பதை வெளிப்படுத்திவிட்டன. இன்னும் வெளியிடப்படாத கடைசிஇரகசியம் உங்கள் பொறுப்பிற்தான் இருக்கிறதாகக் கேள்வி."

ஆமாம், லூசிஎழுதிய அவ்விரகசியத்தின் பிரதியொன்று வத்திக்கானிலிருப்பதாகக் கேள்விப்பட்டோம்"

"இல்லை, அப்படி ஒருபிரதியுமில்லை— ஒருவரும் அதைவாசிக்கவுமில்லை. நான் அதைவைத்திருக்கிறேன். நானும் வாசிக்கவில்லை"

"என்ன? அது தவறிவிட்டால் அல்லது அழிந்துபோனால்"?

"ஏன் அழிந்துபோகும்? போனாலும் லூசிஇன்னும் உயிருடன் இருக்கிறாள். திரும்பவும் எழுதித்தர முடியுமல்லவா?"

அப்பொழுது மேற்றிராணியாரின் வலதுகரமாய்நின்று அவருக்கு உதவிசெய்கிற சுவாமிகலம்பா அங்குவந்தார். செப்பமான ஆங்கிலம்பேசினார்.

"இரகசியமா? கடிதத்தைப்பற்றியா விசாரிக்கிறீர்கள்? அதைப்பற்றி என்னென்னவெல்லாம் எழுதித்தள்ளிவிட்டார்கள். அதைவாசித்த பரிசுத்தபிதா மூர்ச்சையுற்று விழுந்தாரென்றும், அது ஒருகாலம் வகுக்கப்பட்ட குண்டில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் பலபொய்வதந்திகளைப் பரப்பிவிட்டார்கள். அது இங்கேதான் — இந்தப்புத்தகக் குவியலுக்குள்ளேதான் இருக்கிறது. அதைஒருவரும் பிரதிபண்ணவில்லை. இந்தக்குப்பைக்குள் அதைக்கண்டுபிடிப்பது எப்படியென்று உங்கள்கண்கள் கேட்கின்றன."

"அல்லது நெருப்புக்கிரையாகிவிட்டால்! லூசியும்இறந்து, கடிதமும் காணாமற்போய்விட்டால் என்னசெய்வீர்கள்? அந்தஇரகசியம் என்ன அற்பவிஷயமா?

"1960-ம்ஆண்டுவரை அந்தஇரகசியத்தை எவரும் அறியக்கூடாது என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்."

வந்தவர்கள் 'ஆம்'என்று தலையை அசைத்தார்கள்.

"அது உண்மையல்ல. மேற்றிராணியார்விரும்பினால் எந்தநேரமும் உடைத்துப்பார்க்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யமாட்டார்.

சுவாமிகலம்பா தொடர்ந்து: "மேற்றிராணியார் லூசியைச் சந்திக்கப் போனபொழுது நானுங் கூடவிருந்தேன். கடைசிஇரகசியத்தை இப்பொழுது வெளியிடமுடியுமென்று அவள்கூறியபொழுது அதை ஆண்டவரவர்கள் அறியவிரும்பவில்லை. அதை எழுதி உறையில்வைத்து முத்திரையிடும்படி கேட்டாள். அவர் அதை அந்நேரமே வாசித்திருக்கலாம். தான் இறந்தபின், அல்லது 1960-ம்ஆண்டில் எதுமுதல்வருகிறதோ அதைஉலகத்துக்கு அறிவிக்கும்படி லூசி கேட்டிருக்கிறாள்."

"அதை மேற்றிராணியாண்டவர் ஏன் அறிய விரும்பவில்லை? அல்லது வெளிப்படுத்தவில்லை?"

"அதை நானும் அவரிடம் பலமுறையுங் கேட்டிருக்கிறேன்" என்று தொடர்ந்து சொன்னார் கலம்பாசுவாமியார். மோட்சஇரகசியத்தை அறியத்தேடத் தாம் அருகதையல்லராம். அந்தப்பொறுப்புத் தமக்கு வேண்டாமென்கிறார் ஆண்டவர்."

"தமதுபொறுப்பை அவர் உணரவில்லைப்போலும்" என்றார் எங்களில் துணிகரமுள்ள ஒருவர்.

"இல்லையில்லை. சர்வேசுரன் அந்த இரகசியம் உடனடியாக வெளிவரவேண்டுமென்று விரும்பினால் அவ்வாறு கேட்டிருப்பாரே. மேற்றிராணியார்கேட்டால் தான்வெளியிடுவதாக லூசிகூறியிருந்தாள். உடனடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றல்ல. இருவரும் ஏகோபித்துத்தான் திகதியை நியமித்தார்கள்."

சற்றுநேரம் அமைதிநிலவியது. ஆயிரங்கேள்விகளைப் பொறிக்க வேண்டுமென்ற ஆவல். கடைசியாய் எங்களுடன் வந்த பெண்களில்ஒருவர், "நானாயிருந்தால், உடனேயே திறந்திருப்பேனே" என்றார். கலம்பாசுவாமியார் சொண்டிற்குள் சிரித்துக்கொண்டு அதை மேற்றிராணியாருக்கு மொழிபெயர்த்துக் கூறினார். வயோதிக டொம்யோசைஆண்டவரின் வதனத்தில் பரிகாசச்சிரிப்புத் தவழ்ந்தது. அப்பெண்ணைப்பார்த்துத் தாழ்ந்தகுரலில் "அதற்காகத்தான் பெண்களை மேற்றிராணிமார் ஆக்குவதில்லை" என்றார். இதைமொழிபெயர்த்த கலம்பாசுவாமியார் கலகலவென்று சிரித்தார்.

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

பாத்திமாகிரி:—

மட்டக்களப்பு, தாண்டவன்வெளிப் பங்கிலுள்ள பாத்திமாகிரியிலே, போர்த்துக்கால்தேச பாத்திமா கிராமத்தில் தேவதாய் மூன்றுபிள்ளைகளுக்கு அளித்த கடைசிக்காட்சியின் 39-வது வருட நிறைவுதினமாகிய சென்ற 13-10-56 சனிக்கிழமைகாலை பாட்டுப்பூசை நிறைவேறியது.

இப்பங்கைச்சேர்ந்த ஆண், பெண் பாடசாலைகளின் மாணவர்-மாணவிகள் பூசையின்போது கீர்த்தனைகள் பாடியும், செபங்கள் சொல்லியும் அன்னையை மகிழ்வித்தார்கள்.

பூசையின்போது கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேர்க் சுவாமியவர்கள் தேவதாய் பாத்திமாவில் தரிசனையளித்தபோது கூறிய: "நாமே செபமாலைநாயகி! விசுவாசிகள் தங்கள் சீவியத்தைத் திருத்தவேண்டும்; பாவத்தால் ஆண்டவரை விரோதிக்கக்கூடாது; செபமாலை செபிக்கவேண்டும்" என்னும் வாக்கியங்களை ஞாபகப்படுத்தி, கிறீஸ்துவர்கள்ஒவ்வொருவரையும் செபமாலை ஓதும்படியும், குடும்ப செபமாலை சொல்லும்படியும் ஏவினார். செபமாலை மோட்சத்தின் ஏணியென்றும், எந்தப்பாவியும் மன்னிப்புப்பெறவும், மோட்சகரை சேரவும் ஏற்ற பாதையென்றும் சிறந்ததோர் பிரசங்க மூலம் விளக்கிக்காட்டினார். அன்று பங்குக்கிறீஸ்தவர்களில் அதிகமானோர் பூசைகண்டு தெய்வீகவிருந்து அருந்தினர்.

15-10-56 திங்கட்கிழமை பாத்திமாகிரிக் கட்டடம் ஆசீர்வதிக்கப்பட்ட முதலாம்வருட நிறைவு தினமாகும். இதையொட்டி அன்றுகாலை 6 மணிக்குக் கட்டளைக்குரவரால் அங்கு பாடற்பூசை நிறைவேற்றியது. அதன்மேல் ஆசீர்வதிக்கப்பட்ட தேவதாயின் புதிய சுரூபம் பாத்திமாகிரிப்பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று நாள்முழுவதும் கிறீஸ்துவர்கள் கூட்டம்கூட்டமாக அவ்விடஞ்சென்று திருச்சுரூபத்தைச் சந்தித்துப் பக்திசெய்து தேவஅன்னைக்குச் செபமாலைகளும், பாமாலைகளும், மலர்மாலைகளும் சமர்ப்பித்தார்கள்.

— நிருபர்

> **சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.**



*

வியெற்நாம் நாட்டிலே அகதிகள் அந்தரித்துத் தவிக்கின்றார்கள். ஓர்பாலியன் தன்னுடைய தாயைக் கண்டு கொள்ள முடியாது அழுதுகொண்டிருக்கிறான்.

*

# மாதோட்டத் தபால்

— நாட்டுத்தூதன் —

ஐயா! "ஓடுமீன்ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்பதுபோல சிலமேதாவிகள் எப்போது தங்கள் வருவாயைப்பெருக்கச் சந்தர்ப்பம் வருமோவென்று அங்கலாய்ப்போடு காத்திருந்து ஏழைகள் வந்து தங்களை அண்ட உள்ளம்பூரித்து உவப்பான வார்த்தைகள்கூறிக் கைப்பொருள்களைக் கைப்பற்றிக்கொண்டு, பின்னர் நடுக்கடலில் அவர்களைத்தவிக்க விடுகின்றனராம். மற்றுமோர் சாரார் மீனுக்குத்தலையும், பாம்புக்கு வாலும்காட்டும் விலாங்குபோல் நடந்து ஏழைகளிடம் தட்டிச்சுற்றிப் பொருள்பறித்துவிட்டுப் பரமசாதுக்கள் போல் சீவிப்பதுமன்றிக் கிராமங்களில் சமூகப்பிளவுகளை ஏற்படுத்திக் கூத்துப் பார்த்துக் குதூகலித்தும் வருகின்றனராம். அம்மம்ம! இப்பேர்வழிகள் எப்போது நாட்டைவிட்டு நடைகட்டுகின்றனரோ அப்போதே நாடுமுன்னேற்றமடையுமென நம்பியிருக்கலாம்.

**ஐப்பசித் திருவிழா:** இலங்கைக் கத்தோலிக்கமக்களின் முக்கியமான திருசேத்திரங்களில் ஒன்றாகத்திகழும் மருதமடுத்திருப்பதியிலே ஐப்பசி மாசத்திருநாளும் ஆடி, ஆவணி திருநாட்களிற்போன்று பக்தர்களால் நிறைந்து பரிமளிக்கத் தொடங்கியிருக்கிறது. இம்முறை ஐப்பசித் திருநாளின்போது பதினையாயிரம் யாத்திரிகர்கள் சமுகங்கொடுத்தமையே இதற்குப் போதியசான்றாகும்.

**காலபோகக் கூட்டம்:** இவ்வருடம் காலபோக வேளாண்மை செய்வதற்கான திட்டத்தை வகுக்கும் பெரிய கூட்டமொன்று சென்ற 10-ந் திகதி பிற்பகல் உயிலங்குளக் கத்தோலிக்க கனிஷ்டபாடசாலை மண்டபத்திலே மன்னார் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. பத்திரானா அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதில் காரியாதிகாரிகளும், நீர்ப்பாசன அதிகாரிகளும், கிராமத்தலைமைக்காரரும், அநேக [illegible] விதானைமாரும், ஏராளமான கமக்காரரும் கலந்துகொண்டார்கள். ஆரம்பத்திலே விதைப்பு ஆரம்பிக்குங்காலம், அதனைமுடிக்குங்காலம், காவல்நிலையங்கள் ஸ்தாபிக்குங்காலம்என்பன அதிபரால்வரையறுத்துக்கூறப்பட்டன. பின்னர் சென்றவருடம் செய்கைபண்ணப்படாத குளங்களில் இம்முறை நெற்செய்கை நடத்துவதா? விடுவதா? என்னும் பிரச்சினை விவாதிக்கப்பட்டு, ஈற்றில் நெற்செய்கை நடத்துவதில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

**சுயநலம்:** இக்கொடூர தொற்றுநோய் தற்போது அநேகரிலே குடிபுகுந்து நன்மக்களையும் நாசஞ்செய்து வருகின்றது. இஃது தனிப்பட்டவருடன் நின்றுவிடாது சமூக, சாதிய, சமய ஒற்றுமையையும் கெடுத்து நாட்டைச் சீர்குலைத்து வருகின்றது. மக்களை எமலோகம் சேர்த்துவரும் எத்தனையோ தொற்றுநோய்களைத் தடுக்க முயற்சித்துவரும் இந்தக்காலத்திலே இந்தத்தொற்றுநோயையும் பரவவிடாது தடுப்பதற்கு இன்றைய மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கமாவது முயற்சியெடுக்காதா? அந்தோ! இந்தநச்சுநோய் பீடித்துத் தரித்திரப்படும் மக்கள் எத்தனைபேர்! சண்டாளச்செயல்களில் ஈடுபடும் மக்கள் எத்தனைபேர்! நாட்டின் முன்னேற்றத்தை நாசமாக்கும் மக்கள் எத்தனை பேர்! சுயநலத்தை அறவேஒழித்து நன்மக்கள்போற்றும் பொதுநலத்தை ஆபரணமாக அணிந்தவர்களையே பெரியோர்களென்று பெருமிதத்துடன் கூறலாமன்றோ!

**கால்நடைகளின் அவலநிலை:** நீடிய கொடூர வரட்சிகாரணமாக இப்பகுதியிலுள்ள கால்நடைகள் தீனுமின்றி, பருகநீருமின்றிப் பெருந்தொகையாகத் தினமும் மடிந்தவண்ணமிருக்கின்றன. அதனால் தெருக்களிலே பிரயாணஞ்செய்கிறவர்கள் துர்நாற்றந் தாங்கவாற்றாது செல்கின்றனர். விசேஷமாக எருமைகளே அதிகமாக மடிவதால் உழவர்கள் மனமுடைந்து வருந்துகிறார்கள். ஏனெனில், அவர்களின் கமத்தொழில்அச்சாணி எருமைகளேயாம். அம்மட்டா! வீட்டுமிருகங்களின் விசேஷஉணவுகளாகிய தவிடு, வைக்கோல் என்பனவற்றின் விலைகளும் நாளுக்குநாள் ஏற்றமடைந்துகொண்டு வருகின்றன. மக்களின் உணவுகளைக் காட்டிலும் மாடுகளின் உணவுகளே விலைஏறிவருவது ஈண்டு குறிப்பிடற்பாலது.

---

## ஜெருசலேமின்
## புராதன குடும்ப கல்லறை

கி. மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹஸ்மோனிய குடும்பகல்லறை ஒன்று புதியஜெருசலேம்நகரிலே சமீபத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. பலவருடங்களாகப் புதியஜெருசலேமில் புதைபொருள்ஆராய்ச்சியாளர்கள் பூமியைஅகழ்ந்து கண்டுபிடித்தவற்றிலெல்லாம் இது முதற்தரமான முக்கியத்துவ முடையதென்று சொல்லப்படுகிறது. ஹஸ்மோனியர் ஓர் யூத குடும்பத்தினர். மக்கபியர்கள் இந்தக் குடும்பத்தையே சேர்ந்தவர்கள். இந்தக்கல்லறை கிறீஸ்துநாதர் பிறந்தபோது ஜெருசலேமின் அரசனாயிருந்த ஏரோதுமன்னன் குடும்பத்தினரின் பிரேதசேமச்சாலைக்குச் சமீபமாகக் கண்டறியப்படலாயிற்று. ஹஸ்மோனியர்காலக் கல்லறைகளில் முற்றாகப் பழுதுறாதிருக்கக் கண்டறியப்பட்ட முதலாவதுகல்லறை இதுவாகும். புதியகட்டடம்ஒன்றை அமைப்பதற்காக ஒருகூட்டம்தொழிலாளர் அங்கு நிலவறைஒன்றை வெடிவைத்து உடைத்துக்கொண்டிருந்தபோது, ஓர் குகையின்வாயில் தென்படவே, இது செய்தி புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினருக்கு உடனேதானே அறிவிக்கப்பட்டது. அவர்கள் சென்று அந்தக்குகை ஹஸ்மோனிய குடும்ப கல்லறைஒன்றின் ஓர் பகுதியெனக் கண்டறிந்தார்கள். இந்தக் கல்லறை 20 அடிநீளம், 14 அடிஅகலம், சுமார் 10 அடிஉயரமுள்ள பெரியமண்டபம் ஒன்றை அடக்கியிருந்தது. அதனுள் கற்சித்திரத்திலே எழுதண்டுக் குத்துவிளக்குஒன்றும், சோக்குக்கொண்டு கீறப்பட்டனபோன்ற ஒருதொகையான கப்பல்களும், கிரேக்க, அராமெக்கிய பாஷைகளிலே கல்வெட்டுகளும்இருக்கக் காணப்பட்டன. இந்தக்கல்வெட்டுகள் இன்னும் மொழிபெயர்க்கப்படவில்லை. இதனை அடுத்துள்ள ஏனையஇருமண்டபங்கள் அநேக மனிதஎலும்புக் கூடுகளையும், ஒருதொகையான ஹஸ்மோனிய நாணயங்கள், எண்ணெய்விளக்குகள், வீட்டுக்குரிய பாண்டங்களையும் கொண்டிருந்தன. நாணயங்களைக்கொண்டு கல்லறையின் சரியானகாலத்தை நிர்ணயிக்கக் கூடியதாயிருந்தது.

* * *

● இங்கிலாந்திலே லீசெஸ்றர்நகரிலுள்ள தொமினிக்குவின் சபைத் திருச்சிலுவைக்கோவிலை 44,000பவுண்செலவிலே இடவிசாலமுடையதாக்க ஓர் திட்டம் தயாரிக்கப்படலாயிற்று. சமீபத்திலே அங்குமரணமடைந்த திருமதி எலிசா சிமித் எனும்மாது தனதுமரணசாதனத்திலே அதற்கென்று 30,000பவுண்விட்டுப்போயிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைநாட்டும் மகோற்சவம்

வங்காலையிலே பனைநாட்டும் மகோற்சவத்தைச் சென்ற 14-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மன்னார் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. பத்திராஜ அவர்கள் ஆரம்பித்துவைத்தார். வங்காலை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற இந்தஉற்சவத்தில் அவரே முதலாவதாகப் பனம்விதையைப் பிரதான வீதியின்பக்கமாக நாட்டிவைத்தார். அவரைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்களும், மாணவிகளும், பொதுமக்களுமாக ஐஞ்ஞூறுபேருக்குமேற்பட்டவர்கள் வீதியின் இருமருங்கும் பனம் விதைகளை நாட்டினர். அவ்வேளை அரசாங்க அதிபர் பேசியபோது: மக்களின் குறைந்தபிரயாசையுடன் சிறந்த பலனையளிப்பதும், வடபகுதியின் கற்பகத்தருவென்று சிறப்பித்துக் கூறப்படுவதுமான பனைமரங்களை விருத்திசெய்வதானது, பொருளாதார விருத்திக்கும், கிராம முன்னேற்றத்துக்கும் அத்தியாவசியமானது; இப்பகுதியிலுள்ள கிராமச்சங்கங்கள் ஒவ்வொன்றும் இதில் சிரத்தையெடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன் எனக் கூறினின்றார்.

## கமத்தொழிற் பட்டாளம்

ஆயிரவருக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட கமத்தொழிற்பட்டாளத்தை அரசாங்கம் கலைத்துவிடத் தீர்மானித்திருக்கிறது. இதற்குக்காரணம், வருடந்தோறும் இந்தப்பட்டாளத்தினுல் பெருந்தொகைப்பணம் நட்டம் உண்டாகி வந்திருப்பதே. கடந்த பத்து வருடகாலத்திலும் இந்தப்பட்டாளத்தினுல் அரசாங்கத்துக்கு 1 கோடியே 13 லட்சத்துத் 91 ஆயிரம்ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அதாவது வருடந்தோறும் 13 லட்சத்து 20ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுவந்திருக்கிறது. தற்போது இப்பட்டாளத்தில் இருப்பவர்களை அரசாங்ககாணிகளில் குடியேற்றுதற்கும், ஏனையதொழில்ஸ்தாபனங்களில் சேர்த்துக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் இப்போதுஎடுக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

## கல்லூரிப் பரிசளிப்புவிழா


சம்பத்திரிசியார்கல்லூரிப் பரிசளிப்புவிழா நாளைநின்றுவரும் 20-ந்திகதி சனிக்கிழமை மாலை6-15மணிக்குக் கல்லூரிமண்டபத்திலே செனற்றர் சேர் சங்கரப்பிள்ளை பாராச்சிங்கம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடந்தேறும். ஸ்ரீமதிபராசசிங்கம் பரிசில்களைவழங்குவார்.

## காலநிலை

பாட்டம்பாட்டமாக மழைபெய்து கொண்டு வருகிறது. மழைக்கோலம் அதிகமாகக் காணப்படுகின்றது. இடையிடையேவீசுகின்ற ஓர்விதகுளிர்காற்றினுல் தடிமல், காய்ச்சல்ஆகியன தலைகாட்டிக்கொண்டிருக்கின்றன.

## ஓர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதாகோவில் வாசிககுழுவின் தலைமையில் இம்மாதம 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-15 மணிக்கு வண. ஏ. பிறவுண் சுவாமியவர்கள் உண்மையான திருச்சபையின் அறிகுறிகளில் ஒன்றாகிய "பரிசுத்தமாயிருத்தல்" எனும் விஷயமாய் ஆங்கிலத்தில் ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார். அதைக்கேட்டுப் பயனடையுமாறு அபிமானிகள்பலரும் அழைக்கப்படுகின்றார்கள்.



"... ஆனல், சென்றவருடம் நீங்கள் சொன்னீர்கள், நீ மற்ரேர் பிறந்தபெருநாளை ஒருபோதுமே காணமாட்டாய் என்று. அதனுல், தற்போது கைவசமுள்ள பணத்தை வேதபோதக நாடுகளுக்கு நான் அனுப்பிவைக்கிறேன்.

## அடுத்தவருடம் அரசாங்கபஸ்கள்

அடுத்தவருடஆரம்பத்திலே ஓர் நாளில்—அதாவது அடுத்தவருடம் பங்குனி 30-ந்திகதிக்குள் இலங்கையில் நடைபெற்றுவருகின்ற சகலபஸ்சேவைகளையும் தேசியமயமாக்கத் தாம் தீர்மானித்திருப்பதாகவும், இவ்வருடம் முடிவதற்குள்—அநேகமாய் வருகிற மார்கழியிலே சனப்பிரதிநிதிகள்சபையில் தேசியமயமாக்கும் சட்டத்தைத் தாம்கொண்டுவரவிருப்பதாகவும் போக்குவரத்துமந்திரி திரு. எம். சேனநாயக தெரிவித்திருக்கின்றார். இதுவிஷயமாகத் தமதுயோசனைகளை அரசாங்கம் பரிசீலனைசெய்து, பலவிதமுடிபுகளுக்கும் வந்திருப்பதால் தம்முடையவேலைகளை ஆரம்பித்துநடத்தப்போவதாகவும் அவர்கூறியிருக்கின்றார்.

## கல்விமந்திரியின் புகழ்மாலை

கேகாலையைச்சேர்ந்த கியுல்போளை எனுங்கிராமத்திலே புதியபாடசாலைக் கட்டடம்ஒன்றைச் சென்ற 10-ந்திகதியன்று கல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா திறந்துவைத்தபோது, வழமைபோலத் தனதுஆத்திரப்பேச்சிலே பத்திரிகைகள்மீதும், ஐக்கியதேசியக் கட்சிமீதும், சேர்ஜோண் கொத்தலாவல பொலிசார்மீதும், வசைமாரிபொழியலாயினர். அவர் தனதுபேச்சிலே, இலங்கைஅரசாங்க முன்னைநாள்பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலைக்கு இனிமேல் இங்குஇடமில்லை; அவர் இங்கிருந்துகொண்டு, பொலிசாரையும், இராணுவத்தையும் கைக்குள் போட்டுக்கொண்டு இப்போதைய மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சூழ்ச்சிசெய்வதிலும்பார்க்க இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிடுவது நல்லது; அவர் இப்போது நாட்டைக் குழப்பும்வேலையிலே ஈடுபட்டிருக்கின்றார் என்றெல்லாம் அவருக்குப் புகழ்மாலை சூட்டலாயினர்.

## மொழிமாற்றத்தால் தாமதம்

அரசாங்கபகுதிகளிலே அலுவல்களெல்லாம் திடீரெனச் சிங்களமொழியில்நடத்த ஆரம்பித்து ஒருமாதகாலத்துள் அந்தஅலுவல்களில் அதிகதாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. மந்திரிசபை விஷயங்கள்பற்றிப் பல்வேறு மந்திரிகளுக்கும், நிதிமந்திரிக்குமிடையே கடிதப்போக்குவரத்துகள் சிங்களத்தில் நடைபெற்றுவந்த காரணமாக நிர்வாக அலுவல்களிலே அதிக தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன வென்று திறைசேரி தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனுல் அரசாங்க நிர்வாகஅலுவல்கள் காலதாமதமின்றித் துரிதமாக நடைபெறத்தக்கதாக ஆங்கிலமொழியின் அவசியத்தைக் குறிப்பிட்டு, சிங்களமொழியில் கடிதபபோக்குவரத்து நடத்த ஆரம்பித்துள்ள அரசாங்கபகுதிகள் மந்திரிசபை சம்பந்தமான விஷயங்கள்பற்றி நிதிமந்திரியின்ஆலோசனைக்கென்று எழுதப்படும் கடிதங்கள் ஆங்கிலமொழியிலும் எழுதியனுப்பப்பட வேண்டுமெனத் திறைசேரி அவற்றிற்கு ஓர்சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

## சீனுவிலிருந்து மிளகாய்

இலங்கைக்குத்தேவைப்படும் மிளகாயிலே ஒருபெரும்பகுதியை அனுப்பிவைக்கச் செஞ்சீனு ஒப்புக்கொண்டிருக்கிறது. முன்புசீனுவுடன் இலங்கைசெய்துகொண்ட றப்பர்—அரிசிஏற்றுமதி உடன்படிக்கைக்கு இதுபுறம்பானதாகும். இந்தியாவிலிருந்து மிளகாய் ஏற்றுமதிசெய்வதற்கான லைசென்ஸ்களை இந்தியஅரசாங்கம் நிறுத்திவிட்டபடியால் இந்தியாவிலிருந்து மிளகாய் இறக்குமதிசெய்வது தடைப்பட்டுவிட்டது. இந்தச்சீன மிளகாய் இறக்குமதிவியாபாரம் றப்பர் கம்மிஷனர் மூலமாகவே நடைபெறவிருக்கின்றது. சீனமிளகாய் மிகமலிவாக—ஒருறுத்தல் 60 சதம்விலையிலே கிடைக்கக்கூடியதாயிருக்கும். தற்போது இலங்கையில் 1றுத்தல்மிளகாய் 1ரூபா 50சதம்வரையிலே விலைப்படுகின்றது.

## மேலும் பதினெருபகுதிகளில்

மேலும்பதினெரு அரசாங்கபகுதிகள் வருகிறகார்த்திகைமாதம் 15-ந்திகதிமுதல் ஒன்றுடனென்று சிங்களத்திலே கடிதப்போக்குவரத்துகள் நடத்தவிருக்கின்றன. அவ்விதம் நடத்தினுலும் இவைகள் பொதுசனங்களுடன் ஆங்கிலத்திலோ, தமிழிலோ, சிங்களத்திலோ அவரவர்எழுதும் பாஷையில்தான் கடிதப்போக்குவரத்து நடத்திக்கொண்டுவரும். அவற்றிலே கிராமஅபிவிர்த்திப்பகுதி, கூட்டுறவுப்பகுதி, சுதேசவைத்தியபகுதி, கலாசார விவகாரப்பகுதி, காணிக்குடியேற்றபகுதி என்பன விசேஷப்பட்டனவாகும்.

## எடின்பறே கோமகனர்

மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரின் நாயகரான எடின்பறோவின் டியூக்சோமகனர் இம்மாதம் 25-ந் திகதியாகிய வருகிற வியாழக்கிழமை காலை 11 மணிக்குக் கொழும்புத்துறைமுகத்தில் இறங்குவார். அப்போது 25 மரியாதைக் குண்டுகள் தீரப்படும். அதனைத்தொடர்ந்து ஆயுதப்படைகளின் மரியாதை அணிவகுப்பு ஒன்றும் நடந்தேறும். 27-ந்திகதி பிற்பகல் 5மணிக்கு அவர் திரிகோணமலையிலிருந்து ஆஸ்திறேலியாவுக்குப் பிரயாணமாவார். சென்ற திங்கட்கிழமை அவர்லண்டன்நகரிலிருந்து ஆஸ்திறேலியாவுக்குத் தமது 35,000மைல் தூரப்பிரயாணத்தைத் தொடக்கியிருக்கின்றார். ஏறக்குறைய நான்குமாதங்கள்வரை அவர் பிரித்தானிக்கு வெளியேயிருப்பார்.

## சேமக்காலையில்கண்ட பிரேதம்

அனுராதபுரப் பொதுச்சேமக்காலையிலே கத்தோலிக்கரின் பகுதியில் சென்றவெள்ளிக்கிழமை இன்னுரென அறியப்படாத ஒருவனின்பிரேதம் நிர்வாண கோலமாயிருக்கக் கண்டறியப்படலாயிற்று. இந்தப்பிரேதம் அங்கே உடைந்து, ஆதாரபீடத்திலிருந்து இழுத்துவிழுத்தப்பட்ட ஓர்சலவைக்கல் சிலுவையின்பக்கமாய்க் கிடக்கக் காணப்பட்டது. 2,000 ரூபாமதிப்புடைய இந்தச்சலவைக்கல் சிலுவை உடைந்து விழுந்திருப்பதைக்கண்டு அதன் அருகில் சென்றவர்களே பிரேதத்தைத் தற்செயலாகக் கண்டார்கள். இறந்தவன் அந்தச்சிலுவையைத் திருடச்சென்றிருக்க வேண்டுமென்றும், பாரமானஅச்சிலுவையை அசைத்து விழுத்தியபோது அது அவன்மேல் விழுந்து ஆள்இறந்திருக்க வேண்டுமென்றும் அனுமானிக்கப் படுகிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

அருமைச் சதாசகாய மாதாவே!

எனது மகள் லூர்த்துராணி கடுஞ்சுரத்தால் பீடிக்கப்பட்டு, கண்விழிக்காது, பால் குடிக்காது இருக்கும்வேளையில் நீரே என் தஞ்சமென்று நேர்ந்ததின்பேரில் உடனடியாகப் பூரணசுகம் கொடுத்தீர். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். உமது நாமம் எங்கும் எப்பொழுதும் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் எஸ். என். யோசெவ்

சதாசகாயமாதாவே! உமது சதாசகாயத்தை வேண்டுவோர் உமது உதவியை உணரச் செய்தருளுகிறீர். ஓ மாதாவே! எங்களுக்கு அடைக்கலமாக இருக்கிறீர். எங்கள் குறைகளிலும், துன்பங்களிலும் ஒரு உதவியாக இருக்கிறீர்.

சதாசகாயமாதாவை நம்பி நான்கேட்ட மன்ருட்டம், அவவின் அருளால் நான் காத்திராதமுறையில் எனக்குக் கிடைத்தது. அவவின் நாமத்திற்குத்தோத்திரமாக நேர்த்திப்படியே இதைப்பிரசுரிக்கிறேன்.

அ. அந்தோனியாள்
தலைமன்னர் லெம்பேட்

எனது குழந்தைக்கு உண்டுபட்ட கொடிய நோயினுல் நான் மிகவும் மனமடிவு கொண்டு பரிசுத்த சதாசகாயமாதாவையும், அர்ச். சின்னத்தெரேசம்மாளையும் சரணடைந்து அதிகம்உருக்கமாக வேண்டிக்கொண்டதன்பலனுகக் குழந்தைக்கு உண்டான நோய் பரிதிமுன்பனிபோல் அகன்றுபோகப் பெரிதும் ஆனந்தங்கொண்டு, நேர்த்திப்பிரகாரம் இதைக்காவலனில் பிரசித்தஞ்செய்கின்றேன். சதாசகாயமாதாவும், சிறியபுஷ்பமும் புகழப்படுவார்களாக.

பி. யோசேப்பு,
அடம்பன் போஸ்றமாஸ்றர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 18-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



அருமைச் சகோதரங்களே !

அடுத்த ஞாயிற்றுக்கிழமை "மிஷன் ஞாயிறு" என்று திருச்சபை நியமித்திருக்கிறது. அன்றுதினம், வேதத்தைப் பரப்புங்கடமை சகல கிறீஸ்தவர்களுக்கும் உரியதுஎன்பதை நினைவூட்டுந் தினம். கிறீஸ்துபெருமானின் திருமரணப்பலன் எல்லாமனிதருக்குங்கிடைக்க வேணும்.

அதற்குக் கிறீஸ்தவர்களும் மேற்றிராணிமார் குருமாருக்கு உதவியளிக்க வேணும். என்னவிதமான உதவியை நீங்கள் கொடுக்கலாம்? உங்கள் செபத்தால் உதவலாம். வேதப் பரப்புதல் வேலை தேவனுடையவேலை. அதற்குத் தேவ உதவியைச் செபத்தாற் தேடிக் கொடுக்கலாம். உங்கள் உத்தம நடத்தையின் உதவியுந்தேவை. எமது திருவேதம் மனிதரைத் திருத்திப் புனிதராக்கவல்லது. அந்தப்பலன் உங்கள் நல்லொழுக்கத்திற் காணவேண்டும்.

இத்துடன் பரித்தியாகமும் வேண்டும். நீங்களனுபவிக்கும் துன்ப துயரங்களை ஒப்புக்கொடுக்கலாம். இன்னும் உங்களுக்குச் செலவிற்குக் கிடைக்கும் பணத்தில் ஓர்பாகத்தை வேதபோதக நாடுகளிலுள்ள தேவைக்கெனக் கொடுக்கலாம். அது சிறந்தவோர் பரித்தியாகமாகும்.

திருச்சபை உங்களிடம் தாராள மனதை எதிர்பார்க்கிறது.

அண்ணா.



வேதப் பரப்புதலுக்காக எனக்கு உள்ளதை எல்லாம் கொடுத்து—கடைசியாக உடுத்தியிருந்த உடையையும் கொடுத்துவிட்டு, இப்போது மானத்தை மறைத்துக்கொண்டு ஓர் பீப்பாவுக்குள் நிற்கிறேன். சரி, அப்படியானால் நீங்கள்...?

"சருவேசுரன் அன்பாயிருக்கிறார். அன்பில் நிலையாயிருக்கிறவன் சருவேசுரனில் இருக்கிறான்; சருவேசுரனும் அவனில் இருக்கிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாவுக்குக் கடிதம்

அன்புள்ள அண்ணா!

கே. எஸ். ஜி. பெரேரா "வீரமாமுனிவர்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையைப்படித்து மகிழ்ந்தேன். கத்தோலிக்கபத்திரிகைகளில் இலக்கியசம்பந்தமான கட்டுரைகளைக் காண்பது அரிதாயிற்றே. காரணந்தான் என்னே? சென்ற மாசித்திங்கள் 13-ந்திகதி பரந்தநோக்குடைய எமது பாப்பரசர் "இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடும் குருமார் அவை" ஒன்றிற்குப் பேட்டி அளித்து அவ்வாராய்ச்சியின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி, அதைச் செவ்வனே நடத்தஉதவும் மூலாதார உண்மைகளையும் எடுத்துக் கூறினாராம். இப்படி மேல்நாட்டில் குருமாரும், பாப்பரசரும் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட இங்குள்ள வெளியீடுகளில் இலக்கியம் இடம்பெறுவது ஏன் இவ்வளவு அரிதாகின்றது? ஆடிக்கு ஒருமுறை ஆவணிக்கு ஒருமுறை வீரமாமுனிவரைப் புகழ்ந்து பாராட்டுவதால் கத்தோலிக்க தமிழ்இலக்கியம் உருவாகுமா? அவரும் எங்களைப்போன்ற ஒரு கோழையாய் இருந்திருப்பின் தேம்பாவணியையோ, சதுரகராதியையோ இயற்றாது தன்முன்னோடியான ரொபேட் டி நொபிலிஎனும் தத்துவபோதகஅடிகளை இடைக்கிடை புகழ்வதுடன் நின்றிருப்பார். ஆகவே, அவரது சுவடுகளை நாம் கடைப்பிடிக்கில் அவரைப் புகழுவதைவிட்டு அவரைப் போலநாமும் இலக்கிய ஆராய்ச்சியிலும், அதன்மூலம் ஓர் தீம்சுவைசொட்டும் கத்தோலிக்க தமிழ்இலக்கியத்தை ஆக்கும் வேலையிலும் ஈடுபடுவோம். இதற்கு ஊக்கம்அளிக்க எமது பத்திரிகைகளில் ஓர் நிரந்தர கோணத்தை ஏற்படுத்த அண்ணாவின் அயரா உழைப்பைக் கோரிநிற்கின்றேன்.

உங்களன்புள்ள தம்பி,

**துரை**

## இருவரும் பாப்புமார்

பல வருடங்களுக்குமுன் இத்தாலியிலே மந்துவா பட்டணத்தின் மேற்றிராசன ஆலயத்திலே, மற்றோர்ஊரிலிருந்து வந்த ஒருகுருவானவர் பூசைமுடிந்தபின் மேற்றிராணியாரைக் கண்டுவிட்டுப் போகலாமென்று அவர் மாளிகை சென்று, சாத்தப்பட்டிருந்த கதவைத் தட்டினார். பலமுறை தட்டியும் கதவு திறபடா திருப்பதைக்கண்டு, அந்தக் குருவானவர் கதவைத் தாமே திறக்கப் போகுந் தருணத்தில் மேற்றிராணியாரே கதவைத்திறந்து· "உடனே கதவைத் திறவாததற்காக மன்னிக்கவேண்டும்...." என்றுசொன்னார். அப்போது அந்தக் குருவானவர்: "ஆண்டவரே, தங்களைத் தொந்தரவு செய்ததற்காக என்னை மன்னிக்க வேண்டும்; நான் மிலான்நகர் அதிமேற்றிராசன மாளிகையிலுள்ள புத்தகசாலையின் கண்காணிப் பாளராகிய தொன்ரட்டி; தங்கள் மேற்றிராசன ஆலயத்தில் இப்போதுதான் பூசைமுடித்தேன்; தேவரீரைத் தரிசித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றார்.

மேற்றிராணியார்: "ஓஹோ, அப்படியா? நீர் பூசைமுடித்து வந்திருப்பதால், காலைப் போசனம் என்னுடன் அருந்தவாரும்; ஆனால், ஒருகாரியம் என்மனையில் சமையல்முதலிய காரியங்களைக் கவனித்துவரும் என்சகோதரி இன்னும் வரவில்லை; பரவாயில்லை வாரும்; இன்றொருகோப்பை காப்பி தயாரிக்கத் தங்கள் உதவியிருந்தால் இரண்டுமூன்று நிமிஷத்தில் தயாரித்துவிடலாம்...." என்று சொல்லிக்கொண்டே மேற்றிராணியார் மிலானிலிருந்து வந்த சுவாமியாரைச் சமையலறைக்கு அழைத்துச்செல்ல, அங்கேஅவர் கொஞ்சம்காப்பி தயாரித்துக்கொண்டு ரொட்டியுடன் பசியாறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மேற்றிராணியார் யார்? இவர்தான் பிற்காலத்தில் பாப்புவின் சிம்மாசனமேறிய அர்ச். பத்தாம்பத்திநாதர். அந்தக் குருவானவர் யார்? அவர்தான் பதினைந்தாம் ஆசீர்வாதப்பருக்குப்பின் பாப்புவாகத் தெரிந்துகொள்ளப்பட்ட பதினோராம் பத்திநாதர்.

மந்துவா மேற்றிராணியாரின் வீட்டைக் கண்காணித்து, அவருக்குச் சமையல் செய்துவந்த அவருடைய சகோதரி அன்னு சாத்தோ அம்மையார் 1936-ம் ஆண்டு இறந்தார். அர்ச். பத்தாம்பத்திநாதர் ஒரு சிறியகிராமத்துத் தபாற்காரனின் மகன். தாம் பிறந்துவளர்ந்த குடும்பத்தில் எப்படி எளிமைத்தனம் பொருந்திய வாழ்க்கைநடத்திவந்தாரோ அதுபோலவே கடைசிவரையில் அவர் ஆடம்பரமற்ற வகையிலே சீவித்து வந்தார்.

# வாழ்வு அளித்த வனிதை

அன்று ஓர்சனிக்கிழமை. எல்லோரும் கோயிலுக்குப் போவதும் வருவதுமாக இருந்தனர். ஆனல், ஒரேயொரு உருவம்மட்டும் கால்இருந்தும் நொண்டியாய் ஒருஇடத்தில் இருந்துகொண்டு சோகமே உருவாக வருங்கால வாழ்வைஎண்ணி அதன் பிரதிபிம்பமாய்வரும் கண்ணீரை உகுத்துக்கொண்டிருந்தது. "திரேசா" என்ற குரல்கேட்டுத் திரும்பிப்பார்த்தது அவ்வுருவம். அக்குரலுக்குச் சொந்தமான மேரி அங்குநின்றுகொண்டிருந்தாள்.

"என்னதிரேசா, இன்றுநீ கோயிலுக்குப் போகவில்லையா?" என வினவினள் மேரி.

"எப்படிக் கோயிலுக்குப் போகமுடியும் மேரி. வீட்டில் தந்தைக்குச் சுகமில்லை. அதையும்விடக் கோயிலுக்கு உடுத்துச்செல்ல உடையும் இல்லை. நீகேட்கலாம் உடுத்திருப்பதே போதாதாஎன்று. உண்மை; ஆனல், என்னைப்போன்ற எத்தனையோபேர் தங்களுக்குண்டானஅளவில் ஆடை அலங்காரத்துடன் செல்வார்கள். நான்மட்டும் இங்கிலேயில் கோயிலுக்குச் செல்லமுடியுமா? எனக்குமட்டும்அந்த ஆசைஇல்லையா? குமுறும் எரிமலையின் இதயத்தோடு, அமைதியே உறைவிடமான ஆலயத்துக்குச் செல்வதைவிட இங்கிருப்பதே மேல்" என்ற எண்ணத்துடன் இருந்துவிட்டேன் மேரி.

"திரேசா, இன்றுமரியாயின் சனிக்கிழமை. புனிதநாள். வீட்டிலாவது உன் பிரார்த்தனையைத் தொடங்கு. 'சுகமும் துக்கமும், சுழலும் சக்கரம்' என்பதை மறவாதே. துன்பத்தின் சூழ்நிலையில்தான் பக்தியின் சுடர் வீசும். அதற்கு எடுத்துக்காட்டாக நீபடித்த அர்ச்சியசிட்டர்களின் வரலாறுகளே உனக்கு ஆறுதல் அளிக்கும். நேரமாகிவிட்டது நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே நடந்துவிட்டாள் மேரி.

ஆதவனின் ஆட்சி அற்றுவிட்டதை அறிந்து தங்களில்லம் பறக்கும்பட்சிகள் "நாங்கள் வருகின்ருேம் கலங்காதீர்கள்" எனத் தங்கள் சேய்களுக்கு அறிவிக்கும் இன்னிசைக்குரலே எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆதவனும் மறைந்துவிட்டான். இருளரக்கியும் தன் கரும்போர்வையால் உலகைமூட ஆரம்பித்துவிட்டாள். எங்கும் அமைதி.

தந்தையின் உடல்நலம் விசாரித்துக்கொண்டிருந்த திரேசாவின் சிந்தனையைத் திருப்பிவிட்டது சமீபத்தில்உள்ள கோயில்மணி. அவசரஅவசரமாக எழுந்து தன்னறையினுள் சென்று செபத்தை ஆரம்பித்துவிட்டாள் என்பதை அவள்அறையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தி அறிவுறுத்தியது.

மணிபன்னிரண்டு; எங்கும்அமைதி. தனிமையில் செபம்செய்துகொண்டிருந்த திரேசா யாரோவரும் காலடிஓசைகேட்டுத் திரும்பிப்பார்த்தாள். அங்கே! கையில் பிடித்த சிகறெட்டுடன் நின்றுகொண்டிருந்தான் துரோகத்தின் உருவான மிக்கேல்.

அவனைக்கண்டதிரேசா திடுக்கிட்டெழுந்து 'யாரது' என்ருள்.

"தெரியவில்லையா; நான்தான்திரேசா" என்ருன் மிக்கேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அர்த்தராத்திரியில் இங்குவரவேண்டிய காரணம்என்ன?" என்றாள் திரேசா.

"ஒருபெண்ணிடம் ஒருஆண் அதுவும் அர்த்தராத்திரியில் வந்தால் அதற்கும் காரணம் வேண்டுமா?" என்றான் மிக்கேல்.

"மிக்கேல், என்னை நீ இன்னும் உணர்ந்து கொள்ளவில்லைப் போலும், சுத்த இதயம் படைத்தோர் துன்பத்தின் மத்தியிலும் தன்னிலைமறக்க மாட்டார்கள்என்பதை நினைத்துக்கொள். என்னைப்போல் உனக்கொரு சகோதரிஇருந்து, இந்நிலையில் அவளும் அகப்பட்டால் உன்உள்ளம் எப்படி இருக்கும்! சிந்தித்துப்பார். அன்றொருநாள் தனிமையில் செபஞ்செய்து கொண்டிருந்த மரியகொறற்றியைத் தன்னிஷ்டத்திற்கு இணங்காக் காரணத்தால் குத்திக்கொன்றானும் அலெக்சாண்டர் என்னும்பாவி. அப்படி என்னையும் குத்திக் கொன்றுவிடு. இதோகத்தி செய்உன் வேலையை"

"ஐயோ! திரேசா என்னை மன்னித்துவிடு. என்னையும் அந்த அலெக்சாண்டர்என எண்ணிவிடாதே. மன்னித்துவிடு திரேசா, மன்னித்துவிடு! மன்னித்தேன்என்று ஒருதரம்சொல் — சொல்திரேசா சொல்! அப்போதுதான் என்இதயத்தில் நர்த்தனம்புரியும் நயவஞ்சகஇருள் — ஆத்திரப்புயல் அடங்கிவிடும். இல்லையேல் என் இதயம் வெடித்துவிடும். நான் வாழப்பிறந்தவன். வாழவைப்பவள் நீ. ஆம், என்வாழ்க்கை வளமுடையதாகச் செய்யப்போகிறது உன் மன்னிப்பு"எனக் கண்ணீர் உகுத்தவன், முன்னால்இருந்த யேசுநாதரின் திருஉருவப் படத்தின் அடியில்விழுந்து மன்றாடினான்.

செய்வதறியாது திகைத்துநின்ற திரேசா தன் தந்தையின் வரவை அறிந்து, 'அப்பா' என அலறிக்கொண்டு அவரின் பின்னால் சென்றாள்.

விபரமெல்லாம் அறிந்த திரேசாவின்தந்தை மிக்கேலைஎழுப்பி, "அப்பா, மனிதன் தவறுவது இயற்கை. ஆனால், தான்செய்ததவறை உணர்ந்து திருந்திவிடுவதே சிறந்தகுணம். நீ விரும்பியது திரேசாவைத்தானே? இன்று முதல் திரேசாவை உன்னுடையவளாக நினைத்துக்கொள்" என்றுசொல்லி அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டார்.

எதிர்பாராதவிதத்தில் ஏற்பட்டதைஅறிந்த மிக்கேல் மெல்லஎழுந்து இருவரையும் பாசம் கலந்த பார்வையுடன் நோக்கி வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றான்

நாட்கள்பல சென்றுவிட்டன. ஒருநாள் கோயில்மணிகள் ஆரவாரித்தன. ஆம், அன்றுதான் திரேசா, மிக்கேல் திருமணநாளென்று சொல்லவும் வேண்டுமா?

**த. பிலேந்திரன்,**
கல்லாறு.

சபைப்பிதாக்களின் மணிகள்:

## கிறீஸ்துவ ஞானச்சுருக்கம்

சொல்வளத்தில் அல்ல; வாதாடும் திறனில் அல்ல; பேரும், புகழும் தேடுவதிலும் அல்ல; **கிறீஸ்துவ ஞானப்பயிற்சியின் சுருக்கம்.** கிறீஸ்துநாதர் தாய்வயிற்றில் துவக்கம், சிலுவைமரணமட்டும்; போதனையிலும், சாதனையிலும்; முழுவைராக்கியத்துடன் எதைத் தெரிந்துகொண்டாரோ, அத்தகைய விருப்பம் நிறைந்த உண்மைத் தாழ்மையிலேயே அடங்கும் இம்மெய் ஞானம்.

(சிறிய புஷ்ப தினச் சுவிசேஷவிரிவுரை — அர்ச். சிங்காரயபாப்பு)



இவர்கள் உமது சகோதரங்கள். யாதும் உதவிசெய்யாது இவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்தால் உமதுமனம் சாந்தியடையுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org